# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு பிப்ரவரி 26ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரணக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ.,பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சிக்குட்பட்ட தோரணக்கல்பட்டி கிராமம், சர்வே எண்கள்.47/2B மற்றும் 48/3Aல் 0.63ஏக்கர் பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு.B.தினேஷ்குமார் என்பவர் நகராட்சிக்கு விண்ணபத்தினை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3169/2019/திமா2, நாள்.18.12.2019ல் சாலை வரைபடம் தயார் செய்து வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைத்து நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மனைப்பிரிவு உரிமையாளர் தார் சாலை அமைத்துள்ளதினை இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.2352, நாள்.31.08.2020ல் நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதினைத் தொடர்ந்து மனைப் பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடம் ஆகியவற்றினை பத்திர பதிவு எண்.8690/2020ன் வாயிலாக நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.69/2020/கமா, நாள்.19.12.2000ல் ம.வ/மா.ந.ஊ.உ.இ(கமா) எண்.35/2020 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மனைப்பிரிவில் உள்ள சாலைகள் முறையாக அமைத்து நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ம.வ/மா.ந.ஊ.உ.இ(கமா) எண்.35/2020க்கு மனைப்பிரிவு அனுமதி வழங்கலாம். (எப்1/8064/2019)

தீர்மான எண்.134 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சிக்கு சொந்தமான முத்துகுமாரசாமி பேருந்து நிலைய கட்டிடம் 1987ம் ஆண்டு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. மேலும் பேருந்து நிலையத்தின் கட்டிடங்களின் மேற்கூரை மற்றும் சீலிங் பகுதிகள் மிகவும் சேதமடைந்த நிலையிலும், தூண்கள் விரிசல் அடைந்த நிலையிலும் உள்ளதால் பேருந்து நிலையத்தில் நாள்தோறும் 40,000க்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி வருவதினால் ஏதேனும் அசாம்பாவித நிகழ்வுகள் நடைபெறும் முன்னர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள கட்டிடத்தின் உறுதி தன்மையை ஆய்வு செய்ய IRTT கல்லூரி, ஈரோடு அவர்கள் 19.09.2020 அன்று நேரில் ஆய்வு செய்யப்பட்டு பேருந்து நிலையத்தில் உள்ள தென்புற பகுதியில் உள்ள கட்டிடங்களின் உறுதித்தன்மை பாதுகாப்பானதாக இல்லாததால் கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு ஏற்றதில்லை எனவும், சுற்றியுள்ள பகுதிகள் இதனால் பாதிப்படைய கூடும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பேருந்து நிலையத்தில் பழுதடைந்துள்ள தென்புறப்பகுதி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளரின் செயல்முறைகள் கடித. ந.க.எண்.845/2021/பி1, நாள்.23.02.2021ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் மேற்படி முத்துகுமாரசாமி பேருந்து நிலையத்தில் பழுதடைந்துள்ள தென்புறப்பகுதி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.11.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.11.20 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1281/2020)
தீர்மான எண்.135 அனுமதிக்கப்பட்டது.

3)அரசாணை (நிலை) எண்.03/ பள்ளிக் கல்வி/பொது 1(1)/துறை/ நாள்.04.01.2021ல் கரூர் மாவட்டத்தில் உள்ள 19 அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாற்று திறனாளிக்கான சாய்வு தளத்துடன் கூடிய கழிவறை தலா ரூ2.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையின் மூலம் மேற்கொள்ள ஒப்புதல் வாங்கப்பட்டுள்ளதால், இந்நகராட்சிக்கு சொந்தமான குமரன் உயர்நிலைப் பள்ளி மற்றும் பசுபதீஸ்வரா நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாற்று திறனாளி மாணவர்களுக்கான சாய்வு தளத்துடன் கூடிய கழிவறை அமைக்கும் பணிகளை ரூ.2.00 மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்ள தடையின்மை சான்று வழங்குமாறு செயற்பொறியாளர் பொபது, கட்டட (க&ப) கோட்டம், கரூர் அவர்களின் கடித எண்./கோ/02/2021/இவஅ/ நாள்.02.02.2021ல் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி மேற்படி நகராட்சிக்கு சொந்தமான பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் குமரன் உயர்நிலைப்பள்ளியில் மாற்று திறனாளி மாணவர்களுக்கான சாய்வு தளத்துடன் கூடிய கழிவறை அமைக்கும் பணியினை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்ள தடையின்மை சான்று வழங்கலாம் என்று நகராட்சி உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, நகராட்சி உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி நகராட்சிக்கு சொந்தமான பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் குமரன் உயர்நிலைப்பள்ளியில் மாற்று திறனாளி மாணவர்களுக்கான சாய்வு தளத்துடன் கூடிய கழிவறை அமைக்கும் பணியினை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித் துறையின் மூலம் மேற்கொள்ள செயற்பொறியாளர். பொபது, கட்டட (க&ப) கோட்டம், கரூர் அவர்களுக்கு தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2853/2021)

தீர்மான எண்.136 அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் நகராட்சிபொறியாளர் பிரிவுவாகன எண்.TN47U4468 Jet Rod Mechineவாகனத்திற்கு பழுதுகள் மற்றும் மராமத்து பணிகள் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து 20.08.2020–ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோரப்பட்ட விலைப்புள்ளி கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Sri Jayalakshmi Motor Works &Service Station,<br>72/59, 6th Cross KAS Nagar Court Road,<br>Salem – 636007. | 240744 |
| 2 | J.V.K. Auto Diesel Works,<br>J.V.K.Campus,KalarampattiMainRoad,<br>Salem, 636015. | 219856 |
| 3 | Yoha Motor,<br>103C1, Tamilsangam Road, Rajaram Nagar,<br>Salem – 636007 | 229376 |

மேற்படிவரப் பெற்றவிலைப்பள்ளிகளில்குறைந்தவிலைப்புள்ளிகொடுத்துள்ளJ.V.K. Auto Diesel Works,Salem, நிறுவனத்திற்குநகராட்சிபொறியாளர் பிரிவுவாகன எண்.TN47U4468 Jet Rod Mechine வாகனத்திற்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்று 31.08.2020–ல் வேலை உத்திரவு வழங்கி பட்டியல்தொகை ரூ.2,19,856/–யைநகராட்சிகள் சட்டம் விதி1920 பிரிவு 15–ன்கீழ் அனுமதித்து குடிநீர் நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு,</u>

1) மன்றம்பதிவுசெய்யலாம்

2) மேற்படிதொகையினைநகராட்சிகுடிநீர் நிதியிலிருந்துதொகைவழங்கமன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படிவாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/1557/2019)

தீர்மான எண்.137 பதிவு செய்யப்பட்டது.

**5)** கரூர் நகராட்சிபொறியாளர்ப் பிரிவுவாகன எண்.TN47AD6306 (டேங்கர் லாரி) – வாகனத்திற்கு **2020–2021–**ம் ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் செய்ய அங்கீகாரம் பெற்ற பணி மனையிலிருந்து **07.08.2020–**ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, MatturDam- 636401 | 198240 |
| 2 | Sri JothiMurugan Motor Works, SankarNagar, Salem- 636007 | 226855 |
| 3 | Sri Ganapathy Motor Works No.20A, Buddhar Street, Gobichettipalayam-638476 | 213501 |

மேற்படிவரப்பெற்றவிலைப்பள்ளிகளில்குறைந்தவிலைப்புள்ளிகொடுத்துள்ளLakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam நிறுவனத்திற்கு நகராட்சி பொறியாளர்ப் பிரிவுவாகன எண்: TN47AD6306 குடிநீர் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதிபெற்றுநகராட்சிசட்ட விதி**1920** பிரிவு **15–**ன் கீழ்வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான பட்டியல்தொகை ரூ.198240/– அனுமதித்து குடிநீர் நிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
**1)**மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம்.
**2)**மேற்படி வாகனத்திற்குஅரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். *எச்5(4824)2015*

தீர்மான எண்.**138** பதிவு செய்யப்பட்டது.

**6)** கரூர் நகராட்சிபொறியாளர் பிரிவுவாகன எண்.TN47 F1521 (open body) – வாகனத்திற்கு **2020–2021–**ம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் செய்ய அங்கீகாரம் பெற்ற பணிமனையிலிருந்து **07.08.2020–**ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று **20.08.2020–**ஆம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளன அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam- 636401 | 99710 |
| 2 | Sri JothiMurugan Motor Works, SankarNagar, Salem- 636007 | 106495 |
| 3 | Sri Ganapathy Motor Works No.20A, Buddhar Street, Gobichettipalayam-638476 | 123015 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam நிறுவனத்திற்கு நகராட்சி பொறியாளர் பிரிவு வாகன எண்:TN47 F1521 பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதிபெற்றுநகராட்சிசட்ட விதி**1920** பிரிவு **15–**ன் கீழ்வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான பட்டியல்தொகை ரூ.99710/– அனுமதித்து குடிநீர்நிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
**1)**மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம். ஏச்**5(2383)2019**

தீர்மான எண்.**139** பதிவு செய்யப்பட்டது.

**7)**கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண்.TN47AC5234 (Temper Placer) – வாகனத்திற்கு**2020–2021–**ம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் செய்ய அங்கீகாரம் பெற்றபணிமனையிலிருந்து**17.08.2020–**ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று **22.08.2020–**ஆம் தேதி விலைப் புள்ளி

கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள்வரப்பெற்றுள்ளன அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam- 636401 | 159950 |
| 2 | Sri JothiMurugan Motor Works, SankarNagar, Salem- 636007 | 170200 |
| 3 | Sri Ganapathy Motor Works No.20A, Buddhar Street, Gobichettipalayam-638476 | 188250 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam நிறுவனத்திற்கு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண்: TN47 AC 5234 பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நகராட்சி சட்ட விதி **1920** பிரிவு **15–**ன் கீழ்வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான பட்டியல் தொகை ரூ.159950/– அனுமதித்து பொதுநிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
**1)**மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம்.
**2)**மேற்படிவாகனத்திற்குஅரசின்உச்சவரம்புதொகையைவிடகூடுதல்தொகைக் அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(எச்5/2032/2019)**

தீர்மான எண்.**140** பதிவு செய்யப்பட்டது.

**8)** கரூர் நகராட்சிபொதுசுகாதாரப் பிரிவுவாகன எண்.TN47AK0520 (Tipper) – வாகனத்திற்கு **2020–2021–**ம் ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் செய்யஅங்கீகாரம் பெற்றபணிமனையிலிருந்து**24.08.2020–**ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று **31.08.2020 –**ஆம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள்வரப்பெற்றுள்ளனஅதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam- 636401 | 189900 |
| 2 | Sri JothiMurugan Motor Works, SankarNagar, Salem- 636007 | 201350 |
| 3 | Sri Ganapathy Motor Works No.20A, Buddhar Street, Gobichettipalayam-638476 | 223600 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam நிறுவனத்திற்கு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்: TN47AK0520 பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நகராட்சி சட்ட விதி **1920** பிரிவு **15–**ன் கீழ்வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான பட்டியல் தொகை ரூ.189900/– அனுமதித்து பொது நிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
**1)**மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம்.
**2)**மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெறமன்றம் அனுமதிக்கலாம். **(எச்5/3989/2020)**

தீர்மான எண்.**141** பதிவு செய்யப்பட்டது.

**9)**கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுவாகன எண்.TN47R9884 (Three Wheeler) – வாகனத்திற்கு **2020–2021–**ம் ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் செய்ய அங்கீகாரம் பெற்ற பணிமனையிலிருந்து**07.08.2020–**ல் ஆணையர் மற்றும்

தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று **20.08.2020**–ஆம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளனஅதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam- 636401 | 94931 |
| 2 | Sri JothiMurugan Motor Works, SankarNagar, Salem- 636007 | 106436 |
| 3 | Sri Ganapathy Motor Works No.20A, Buddhar Street, Gobichettipalayam-638476 | 100250 |

மேற்படி வரப்பெற்ற விலைப்பள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam நிறுவனத்திற்கு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுவாகன எண்: TN47R9884 பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நகராட்சிசட்ட விதி**1920** பிரிவு **15**–ன் கீழ்வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான பட்டியல்தொகை ரூ.94931/– அனுமதித்து பொதுநிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதைமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**1)**மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம்.

**2)**மேற்படிவாகனத்திற்குஅரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(எச்5/14591/2020)**

தீர்மான எண்.**142** பதிவு செய்யப்பட்டது.

**10)**கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண்.TN47AH8860 (Tipper) – வாகனத்திற்கு **2020–2021**–ம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் செய்ய அங்கீகாரம் பெற்ற பணிமனையிலிருந்து **05.10.2020**–ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று **09.10.2020**–ஆம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள்வரப்பெற்றுள்ளனஅதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam- 636401 | 99946 |
| 2 | Sri JothiMurugan Motor Works, SankarNagar, Salem- 636007 | 106259 |
| 3 | Sri Ganapathy Motor Works No.20A, Buddhar Street, Gobichettipalayam-638476 | 118413 |

மேற்படி வரப் பெற்றவிலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel Works, Work shop Cornor, Mattur Dam நிறுவனத்திற்கு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுவாகன எண்: TN47AH8860 பொதுசுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்றுநகராட்சி சட்ட விதி**1920** பிரிவு **15**–ன் கீழ்வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான பட்டியல்தொகை ரூ.99946/– அனுமதித்து பொது நிதியின் கீழ்செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**1)**மன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம்.

**2)**மேற்படி வாகனத்திற்குஅரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(எச்5/5077/2020)**

தீர்மான எண்.**143** பதிவு செய்யப்பட்டது.

**11)**கரூர் நகராட்சிக்குட்பட்ட பொன்நகர் உபநீருந்து நிலையத்தில் **20HP** & **25HP** திறன் கொண்ட மின் மோட்டார் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு முதன்முறையாக **23.02.2021**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.55லட்சம்**</u>

1. Malliga Engineering Contractor, Karur மதிப்பீட்டை விட **0.17**% சதம் குறைவு
2. Navaladiyan Electrical & Engineering Contractor, Karur மதிப்பீட்டை விட **3.06**% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.**2596**, நாள்.**31.12.2020**ம் தேதி ரூ.**2.55** லட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Malliga Engineering Contractor, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். **(இ3/6666/2020)**

தீர்மான எண்.**144** அனுமதிக்கப்பட்டது.

**12)**கரூர் நகராட்சிக்குட்பட்ட பொன்நகர் நீருந்து நிலையத்தில் பழுதடைந்த **20** எச்.பி மின் மோட்டாருக்கு பதிலாக **25** எச்.பி திறன் கொண்ட மோட்டார் பொருத்தும் பணிக்கு முதன்முறையாக **23.02.2021**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 லட்சம்**</u>

1. A Sun Power Engineers, Karur மதிப்பீட்டை விட 0.29% சதம் குறைவு
2. Thiru.P.Nallusamy, Karur மதிப்பீட்டை விட 2.88% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.**2603**, நாள். **31.12.2020**ம் தேதி ரூ.**3.00** இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineers, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். **(இ3/7681/2020)**

தீர்மான எண்.**145** அனுமதிக்கப்பட்டது.

**13)**கரூர் நகராட்சிக்குட்பட்ட பொன்நகர் நீருந்து நிலையத்தில் பழுதடைந்துள்ள மின்மோட்டாருக்கு பதிலாக **25**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார் பொருத்தும் பணிக்கு முதன்முறையாக **23.02.2021**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.75 லட்சம்**</u>

1. A Sun Power Engineers, Karur மதிப்பீட்டை விட **0.22**% சதம் குறைவு
2. Thiru.P.Nallusamy, Karur மதிப்பீட்டை விட **3.18**% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.**2607**, நாள். **31.12.2020**ம் தேதி ரூ.**1.75** இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineers, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/7684/2020)

தீர்மான எண்.146 அனுமதிக்கப்பட்டது.

14)கரூர் நகராட்சி வார்டு எண்.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் உள்ள் ஆழ்துளை கிணறுகளிலுள்ள சிறுமின்விசைப்பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00லட்சம்</u>

1. Malliga Engineering Contractor, Karur மதிப்பீட்டை விட 0.07% சதம் குறைவு
2. Navaladiyan Electrical & Engineering Contractor, Karur மதிப்பீட்டை விட 3.22% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.43, நாள்.29.01.2021ம் தேதி ரூ.15.00 லட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Malliga Engineering Contractor, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/1109/2021)

தீர்மான எண்.147 அனுமதிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சி வார்டு எண்.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளிலுள்ள சிறுமின்விசைப்பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00லட்சம்</u>

1. Malliga Engineering Contractor, Karur மதிப்பீட்டை விட 0.09% சதம் குறைவு
2. Navaladiyan Electrical & Engineering Contractor, Karur மதிப்பீட்டை விட 3.09% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 44, நாள். 29.01.2021ம் தேதி ரூ.5.00 லட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Malliga Engineering Contractor, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/1111/2021)

தீர்மான எண்.148 அனுமதிக்கப்பட்டது.

16)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 சிவானந்தா தெருவில் அமைந்துள்ள குழந்தைகள் மையத்தில் குடிநீர் வசதி, கழிப்பிடவசதி மற்றும் மையத்தில் பராமரிப்பு செய்யும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 லட்சம்</u>

1. Thiru.S.Jayaraman, Karur மதிப்பீட்டை விட 0.22% சதம் குறைவு
2. M/s.PRG Construction, Karur மதிப்பீட்டை விட 3.32% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 118,நாள். 12.02.2021ம் தேதி ரூ.2.50 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.S.Jayaraman, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/583/2021)

தீர்மான எண்.149 அனுமதிக்கப்பட்டது.

17)கரூர் நகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி வார்டு எண்.33 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்த சிறுமின் விசை பம்புகளுக்கு பதிலாக புதியதாக மின் மோட்டார்கள் மற்றும் தேவையான உதிரி பொருட்கள் பொருத்தும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.60 லட்சம்</u>

1. M/s.PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.24% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 3.12% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.41, நாள்.29.01.2021ம் தேதி ரூ.5.60 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/1107/2021)

தீர்மான எண்.150 அனுமதிக்கப்பட்டது.

18)கரூர் நகராட்சி வார்டு எண்.48 அருகம்பாளையத்தில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்சாலை முதல் மயானபகுதி வரை நீட்டிப்பு செய்தல் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.50 லட்சம்</u>

1. Thiru.R.Thangavel,, Karur மதிப்பீட்டை விட 0.19% சதம் குறைவு
2. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 2.97% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.39, நாள். 29.01.2021ம் தேதி ரூ.7.50 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.R.Thangavel,, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/1078/2021)

தீர்மான எண்.151 அனுமதிக்கப்பட்டது.

19)கரூர் நகராட்சி மூலக்காட்டானூர் நீர் உந்து நிலையத்தில் குளோரினேசன் செய்து குடிநீர் விநியோகம் செய்ய சோடியம் ஹேப்போ குளோரைட் திரவம் கொள்முதல் செய்யும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 லட்சம்</u>

1. M/s.PRG Construction, Karur மதிப்பீட்டை விட 1.20% சதம் குறைவு
2. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டை விட 3.29% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 2643, நாள். 31.12.2020ம் தேதி ரூ.9.00 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/5998/2021)

தீர்மான எண்.152 அனுமதிக்கப்பட்டது.

20)கரூர் நகராட்சி வார்டு எண்.33ல் சமுதாய கூடத்தில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00 லட்சம்</u>

1. Thiru.G.Senthilkumar,, Karur மதிப்பீட்டை விட 0.17% சதம் குறைவு
2. Thiru.R.Thangavel,, Karur மதிப்பீட்டை விட 3.03% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.18, நாள்.20.01.2021ம் தேதி ரூ.4.00 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.G.Senthilkumar,, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/1077/2021)

தீர்மான எண்.153 அனுமதிக்கப்பட்டது.

21)கரூர் நகராட்சிவார்டு எண்.23,24,25 மற்றும் 30,31 பகுதிகளில் உள்ள சிறுமின் விசைப் பம்புகளில் குடிநீர் குழாய்கள் விஸ்தரிப்பு செய்தல் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 லட்சம்</u>

1. M/s.PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.18% சதம் குறைவு
2. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டை விட 3.16% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 2658, நாள். 31.12.2020ம் தேதி ரூ.9.00 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/5498/2020)

தீர்மான எண்.154 அனுமதிக்கப்பட்டது.

22)கரூர் நகராட்சிக்குட்பட்ட ஐவஹர் பஜார் மேல்நிலை நீர்த்தேக்கக்தொட்டியில் குடிநீர் வால்வு தொட்டி அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஓப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.10 லட்சம்</u>

1. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டை விட 0.19% சதம் குறைவு
2. M/s. RPSConstruction, Karur மதிப்பீட்டை விட 3.03% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.06, நாள்.08.01.2021 ம் தேதி ரூ.3.10 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.M.Loganathan, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ2/322/2021)

தீர்மான எண்.155 அனுமதிக்கப்பட்டது.

23)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை பழுது பார்க்கும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 லட்சம்</u>

1. M/s.PRG Construction, Karur மதிப்பீட்டை விட 0.12% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 3.46% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.42, நாள்.29.01.2021 ம் தேதி ரூ.7.00 இலட்சத்தில் நகராட்சி குடிநீர்நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.PRG Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/1106/2021)

தீர்மான எண்.156 அனுமதிக்கப்பட்டது.

24)கரூர் நகராட்சியில் பொது நிதி பணிகள்,கல்வி பணிகள் மற்றும் குடிநீர் பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 09.02.2021ம் தேதி அன்று தஞ்சை முரசு பிரைவேட் லிமிடேட், திருச்சி மூலமாக மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.5906/—ஐ மாலை தமிழகம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.5906 /– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ( இ3/ 1900/2021)

தீர்மான எண்.157 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சியில் 2016 – 2017 முதல் 2020–2021ம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டு சாதனை பட்டியல் மற்றும் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் விவரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 2021ம் ஆண்டு பொங்கல் மலரில், மாலை மலர் திருச்சி மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.7000/–ஐ மாலை மலர், திருச்சி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.7000 /– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1243/2021)

தீர்மான எண்.158 அனுமதிக்கப்பட்டது.

26)கரூர் நகராட்சியில் காமராஜ் மார்க்கெட் முதல் வடக்கு பகுதி வரை 435 மீட்டர் நீளத்திற்கு வடிகால் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 26,27,28.02.2021ம் தேதிகளில் Bright Advertising Chennai மூலமாக மாநில அளவில் விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.38,116/– ஐ Bright Advertising Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.38,116 /– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1243/2021)

தீர்மான எண்.159 அனுமதிக்கப்பட்டது.

27)கரூர் நகராட்சியில் பொது நிதி பணிகள் மற்றும் குடிநீர் பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 16.02.2021ம் தேதி அன்று மாலை தமிழகம் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.17,640/–ஐ மாலை தமிழகம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.17,640 /– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1243/2021)

தீர்மான எண்.160 அனுமதிக்கப்பட்டது.

28)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–2021ன்கீழ் கரூர் நகராட்சி காந்திகிராமம் பூங்கா வளாகத்தில் பொது பூங்கா அமைக்கும் பணிக்கு 24.02.2021ம் தேதி முதல் முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இவ்வொப்பந்தப்புள்ளிகளின் மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.11.25லட்சம்</u>

1) திரு. PRG Construction, கரூர்.மதிப்பீட்டை விட 0.18 % சதம் குறைவு
2) திரு.ஆர்.பி.எஸ். Construction கரூர் மதிப்பீட்டை விட 3.26% சதம் அதிகம்

அலுவலகக் குறிப்பு
1)கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.அ3/1194/2020 நாள்.11.02.2021ல் ரூ.11.25 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
2)மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.PRG Construction கரூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
(இ1/7620/2019)

தீர்மான எண்.161 அனுமதிக்கப்பட்டது.

29)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020ன்கீழ் கரூர் நகராட்சி வார்டு எண்–37ல் உள்ள காந்திகிராமம் மைதானத்தில் உடற்பயிற்சி கூடம் மற்றும் பொது பூங்கா அமைக்கும் பணிக்கு 24.02.2021ம் தேதி முதல் முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இவ்வொப்பந்தப் புள்ளிகளின் மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 லட்சம்</u>

1) திரு. ஸ்ரீபில்டர்ஸ், மணப்பாறை மதிப்பீட்டை விட 0.07% சதம் குறைவு
2) திரு.ஜி.நந்தகுமார், கரூர் மதிப்பீட்டை விட 3.03 % சதம் அதிகம்

அலுவலகக் குறிப்பு
1)கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.அ3/2835/2019 நாள்.11.02.2021ல் ரூ25.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
2)மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஸ்ரீபில்டர்ஸ், மணப்பாறை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
(இ1/7620/2019)

தீர்மான எண்.162 அனுமதிக்கப்பட்டது.

30) கரூர் நகராட்சியில் சாலை பாதுகாப்பு நிதி 2020–2021 மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–2020 2 பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 13.01.2021ம் தேதி அன்று தினமலர், திருச்சி மூலமாக தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.12127–ஐ Raji Communication, கரூர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத் தொகை ரூ.12127/– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/3429/2021)

தீர்மான எண்.163 அனுமதிக்கப்பட்டது.

31)கரூர் நகராட்சி பகுதிகளில் 16.12.2020ம் தேதி புதன்கிழமை அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கரூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் மற்றும் பிரம்ம தீர்த்தம் பகுதிகளில் உள்ள புதிய பல்நோக்கு வணிக வளாக கட்டிடம் ஆகியவற்றை துவக்கி வைக்கப்படவுள்ள விபரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் ஒரு நாள் மட்டும் கால்பக்கம் அளவில் தஞ்சை மாலை முரசு செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதற்குண்டான விளம்பரக் கட்டணம் ரூ.18,900/–ஐ மாலை தமிழகம், அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.18900 /– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1243/2021)

தீர்மான எண்.164 அனுமதிக்கப்பட்டது.

32)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019ன்கீழ் கரூர் நகராட்சி காந்திகிராமம் குமார் ஸ்டோர் அருகில் பயணியர் நிழற்குடை அமைக்கும் பணிக்கு 24.02.2021ம் தேதி முதல் முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இவ்வொப்பந்தப்புள்ளிகளின் மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 லட்சம்</u>

1) திரு. ஸ்ரீபில்டர்ஸ், மணப்பாறை மதிப்பீட்டைவிட 0.10 % சதம் குறைவு
2) திரு.ஜி.நந்தகுமார், கரூர் மதிப்பீட்டை விட 3.00 % சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு**
1)கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.அ3/2931/2018 நாள்.11.02.2021ல் ரூ.10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
2)மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஸ்ரீபில்டர்ஸ், மணப்பாறை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
(இ1/7620/2019)

தீர்மான எண்.165 அனுமதிக்கப்பட்டது.

33) கரூர் நகராட்சி பகுதியான இனாம் கரூர் மற்றும் கரூர் பகுதிகளில் (வார்டு எண்.1 முதல் 32 வரை) அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் அரசு காலனியில் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் (STP) ஒரு பிரதான கழிவு நீரேற்று நிலையமும் (Main Pumping station) .இரண்டு இடங்களில் கழிவு நீருந்து நிலையங்களும் (Lifting Pumping Station) 2.97 கி.மீ நீளத்திற்கு நீரேற்றும் பிரதான குழாய்களும், 3013 பாதாள சாக்கடை ஆய்வு குழிகளும், 92.25 கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்களும் ஆகியவற்றினை பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் நகராட்சியில் நிதி சேமிப்பு ஏற்படும் நிலையை கருதியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.69, நாள்.04.05.1999–ன்படி ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் தனியார் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.3390, நாள்.20.11.2015–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.23656/2013/டிஒ1, நாள்.04.02.2016–ன்படி ரூ.98.33 இலட்சத்தில் தொழில்நுட்ப ஆணை வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் 24.02.2016–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட 6.91% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/S PRG Construction. Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகர்மன்ற தீர்மான எண்.3756, நாள்.16.06.2016–ல் அனுமதியளிக்கப்பட்டு இவ்வலுவலக செயல்முறை கடித ந.க.எண்.12700/2015/இ5 நாள்.25.03.2017–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 31.03.2018–ல் முடிவுற்ற நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய பணியாளர்களை பணியமர்த்தி பராமரிப்பு பணியினை மேற்கொள்வதால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு மேற்படி ஒப்பந்ததாரர் தொடர்ந்து அடுத்த நிதியாண்டிற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள உத்திரவு வழங்குமாறு 28.03.2018–ந் தேதி கடிதத்தில் கோரியுள்ளதன்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணியினை 2017–2018 வருடங்களில் பராமரிப்பு பணியினை மேற்கொண்ட M/S PRG Construction .Karur அவர்களுககு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த விலை விகிதத்திலேயே ஒப்பந்த விதிகளின்படி 01.04.2018 முதல் 31.03.2019 வரை ஓராண்டு காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1365 நாள்.28.02.2019–ன்படி 01.04.2019 முதல் 31.3.2020 ஓராண்டு காலத்திற்கு நகராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.இ5/12700/2015 நாள்.20.3.2019–ன்படி பணிக் காலத்தை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 01.04.2020 முதல் புதைவடிகால் திட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கருத்துரு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற்று பின் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி நிறைவு செய்ய உள்ள சமயத்தில் வேண்டியுள்ளதால், தற்போதுள்ள கொரோனா நோய் தொற்று காலத்தைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே பணி மேற்கொள்ளும்

நிறுவனம் மூலம் 01.04.2020 முதல் 30.09.2020 வரை பணி நீட்டிப்பு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.2101 நாள்.23.03.2020.ல அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது 01.10.2020 முதல் 30.09.2021 வரை ஓராண்டு காலத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நீர்உந்து நிலையம், பிரதான கழிவுநீர் குழாய், மனித ஆய்வுக்குழிகள் ஆகியவற்றினை பராமரிப்பு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற 03.09.2020 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க கால தாமதம் ஏற்படும் என்பதால் நகர்மன்ற தீர்மான எண்.2424 நாள்.09.09.2020ல் 01.10.2020 முதல் 31.11.2020 வரை 2மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்தும், நகர்மன்ற தீர்மான எண்.2578 நாள்.30.11.2020ல் 01.12.2020 முதல் 31.03.2021 வரை 4 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டதின்படி 31.03.2021ம் தேதியுடன் பணி முடிவடைகிறது. தற்போது தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல் 2021 தேதி அறிவிப்பு வெளியிடப்பட உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க முடியாத சூழ்நிலை உள்ளதால் ஏற்கனவே உத்தரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் PRG Construction, Karur என்பவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தில் 01.04.2021 முதல் 30.06.2021 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கவும், அதற்குண்டான தொகை ரூ.16.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.16.75 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ5/1455/2020)

தீர்மான எண்.166 அனுமதிக்கப்பட்டது.

34)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 48 வரை கடந்த 2017 முதல் அரையாண்டிலிருந்து கட்டிட வரிவிதிப்பு செய்யப்பட்ட காலிமனை வரிஇனங்களுக்கு புதிதாக கட்டிடவரிவிதிப்பு செய்யப்பட்ட பின்பும் தொடர்ந்து வரக்கூடிய காலிமனை வரிகள் மற்றும் பழைய கட்டிடசொத்து வரிவிதிப்புகளுக்கு பதிலாக புதிய சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்ட பின்பும் தொடர்ந்து வரக்கூடிய சொத்துவரி இனங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள விவரப்படி கேட்பில் இருந்து வருகிறது.

எனவே தற்போது நிலுவையாக உள்ள ஏற்கனவே கட்டிட சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு நீக்கம் செய்ய வேண்டிய காலியிடவரி இனங்களை வசூல் செய்ய இயலாத நிலையில் உள்ளதாலும், காலிமனை வரிவிதிப்பு மற்றும் பழைய சொத்துவரிவிதிப்பு கேட்பான ரூ.8,79,593/–க்கு பதிலாக புதிதாக சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்ட புதிய வரி இனங்களுக்கு அரையாண்டு கேட்பு ரூ71,46,803/– எழுப்பப்பட்டுள்ளது, மேலும் பட்டியலில் காணும் நீக்கம் செய்யப்பட வேண்டிய காலிமனை வரிவிதிப்புகளின் மற்றும் சொத்துவரிவிதிப்பு மொத்த நிலுவைக்கேட்புத்தொகை ரூ39,15,288/– யினை 2017–2018 முதல் அரையாண்டு முதல் 2020–2021 இரண்டாம் அரையாண்டு வரை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| கரூர் நகராட்சி | | | | |
|---|---|---|---|---|
| **Write off (நீக்கம் செய்தல்)** | | | | |
| **Ward-1 To 48** | | | | |
| வார்டு எண் | அரை வருட வரி | புதிய வருட வரி | கேட்பு உயர்வு வேறுபாட்டுத் தொகை (2–3) | நீக்கம் செய்ய வேண்டிய மொத்த தொகை |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 51309 | 209852 | 158543 | **193980** |
| 2 | 4825 | 41972 | 37147 | **11037** |
| 3 | 6840 | 29992 | 23152 | **59984** |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 30788 | 198828 | 168040 | **130692** |
| 5 | 6910 | 104087 | 97177 | **19905** |
| 6 | 14945 | 183914 | 168969 | **48089** |
| 7 | 2186 | 50117 | 47931 | **12484** |
| 8 | 4961 | 17060 | 12099 | **17849** |
| 9 | 1106 | 3398 | 2292 | **7302** |
| 10 | 22291 | 138853 | 116562 | **80803** |
| 11 | 19844 | 158327 | 138483 | **57981** |
| 12 | 23676 | 81493 | 57817 | **118064** |
| 13 | 3420 | 23775 | 20355 | **11974** |
| 14 | 6083 | 28517 | 22434 | **18285** |
| 15 | 1425 | 2863 | 1438 | **3977** |
| 16 | 4733 | 60971 | 56238 | **37128** |
| 17 | 80 | 2575 | 2495 | **1040** |
| 18 | 63051 | 3634278 | 3571227 | **362195** |
| 19 | 11932 | 118837 | 106905 | **39520** |
| 20 | 0 | 0 | 0 | **0** |
| 21 | 272 | 10270 | 9998 | **3328** |
| 22 | 3352 | 36754 | 33402 | **35544** |
| 23 | 0 | 0 | 0 | **0** |
| 24 | 65 | 457 | 392 | **130** |
| 25 | 1123 | 5558 | 4435 | **2434** |
| 26 | 0 | 0 | 0 | **0** |
| 27 | 1632 | 8177 | 6545 | **4315** |
| 28 | 8078 | 12013 | 3935 | **72952** |
| 29 | 1281 | 3536 | 2255 | **11791** |
| 30 | 3448 | 19862 | 16414 | **14977** |
| 31 | 7167 | 24688 | 17521 | **49672** |
| 32 | 2643 | 15741 | 13098 | **16117** |
| 33 | 656 | 1350 | 694 | **3374** |
| 34 | 5930 | 9187 | 3257 | **33332** |
| 35 | 23289 | 31591 | 8302 | **103207** |
| 36 | 63471 | 153201 | 89730 | **327866** |
| 37 | 113765 | 337718 | 223953 | **516504** |
| 38 | 57956 | 230826 | 172870 | **202113** |
| 39 | 55053 | 343181 | 288128 | **245577** |
| 40 | 8164 | 24282 | 16118 | **61170** |

| | | | | |
|---|---|---|---|---|
| 41 | 41733 | 139916 | 98183 | **123927** |
| 42 | 5545 | 9695 | 4150 | **39348** |
| 43 | 8817 | 28828 | 20011 | **26582** |
| 44 | 68103 | 177642 | 109539 | **344800** |
| 45 | 6107 | 16760 | 10653 | **30336** |
| 46 | 5793 | 46325 | 40532 | **16191** |
| 47 | 50544 | 142066 | 91522 | **191527** |
| 48 | 55201 | 227470 | 172269 | **205885** |
| **Total** | **879593** | **7146803** | **6267210** | **3915288** |

**அலுவலகக்குறிப்பு:**
மன்றம் அனுதிக்கலாம். (அ1/325/2021)

தீர்மான எண்.167 அனுமதிக்கப்பட்டது.

35)இந்நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதிக்கு KFW திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான நீருந்து நிலையம் KVB நகர் பகுதியில் இடமில்லாமையால் பெரியகுளத்துப்பாளையம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நீருந்தும் நிலையத்தில் இருந்து வார்டுஎண்:03, இராமானுஜம் நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்ய 8" DI PIPE மற்றும் வார்டு எண்:05, காமாராஜபுரம் மற்றும் செங்குந்தபுரம் குறுக்குத் தெருக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பிரதான பகிர்மானக்குழாய் 10" DI PIPE அமைக்கப்பட வேண்டியதாக உள்ளது. நீருந்தும் நிலையத்தில் இருந்து கரூர்–ஈரோடு இருப்புப்பாதையின் அடியில் குழாய்கள் பதிக்கப்பட்டு இணைப்பு சாலையின் தென்புறத்தில் கீழமேலாக அமைக்கப்பட்டுள்ள வடிகாலினை ஒட்டியும், பின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி குகைவழிப்பாதையின் மேல்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள வடிகாலினை ஒட்டியும் இரண்டு குடிநீர் குழாய்களையும் அமைக்க வேண்டியதாக உள்ளது. குகைவழிப்பாதையின் தென்பகுதியில் இருந்து பெரியார் நகர் பகுதிக்குச் செல்ல சாலை வசதி இல்லாமையால் பிரதான நீரேற்றும் இரண்டு குழாய்களையும் பதிக்க இயலாமல் உள்ளது.

எனவே குடிநீர் பிரதான குழாய்களை பதித்திடவும் குளத்துப்பாளையம் பகுதியில் இருந்து பெரியார் நகர் வழியாக கோவை சாலையினை சென்றடையும் வகையில் சாலை அமைக்க வேண்டி L.N.S கிராமம், புல எண்.403–ல் நன் கொடை ஆவணம் எண்.1787/2020 மூலம் 219.31 சதுரமீட்டர் இடம் மற்றும் புலஎண்.401–ல் நன்கொடை ஆவணம் எண்.2050/2020 மூலம் 643.81 சதுரமீட்டர் இடங்கள் பெறப்பட்டுள்ளது. குடிநீர் குழாய்கள் மற்றும் சாலை அமைக்கும் பணிகளின் அவசர அவசியம் கருதி நன் கொடை ஆவணங்கள் எண்.1787/2020 மற்றும் 2050/2020–ன் மூலம் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட இடங்களை நகராட்சி வசம் எடுத்துக்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு வழங்க மன்றப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (எப்1/6963/2017)

தீர்மான எண்.168 அனுமதிக்கப்பட்டது.

36)கரூர் இரயில் நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை வரை 40அடி அகல இணைப்பு சாலை அமைக்கும் பணிக்கு அரசாணை எண். G.O(M.S)No.99 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08.10.2018ல் கரூர் நகராட்சியில் உட்கூட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டம் 2018–2019 (Infrastructure and amenities fund scheme)ல் ரூ.18.00கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு எண்.18281/16/DO1, நாள்.16.11.2018–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வரும்போது பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், பெரிய குளத்துபாளையம் பகுதியில் வசிக்கும்

பொதுமக்கள் குகை வழிப்பாதை (Sub way) வழியாக பெரியார் நகரை அடையவும் வார்டு எண்.4 மற்றும் 5 பகுதிகளில் உள்ள பெரியார் நகர், வையாபுரி நகர், கே.வி.பி., நகர், செங்குந்தபுரம் பகுதி மக்கள் 40அடி அகல இணைப்பு சாலையை எளிதில் அணுகும் வகையில் பெரியார் நகரிலிருந்து குகை வழிப்பாதை வரை அணுகுசாலை மற்றும் வடிகால் அமைக்கவும் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து இப்பணிகள் மேற்கொள்வதற்கான வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் IRTT பொறியியல் கல்லூரி, பெருந்துறை ஈரோடு–ல் இருந்து பெறப்பட்டு, அதன்படி பணிகளின் வடிவமைப்பு தன்மைக்கேற்ப, நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமலும், ஒப்புதல் வழங்கப்பட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு, ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை ரூ.1800.00லட்சத்திற்கு மிகாமல் பணியினை மேற்கொள்ளவும், கூடுதல் பணிகளுக்கான ஒப்புதலை முதன்னை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண்.2587 நாள்.11.12.2020–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து முதன்மை தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்கள் கடித ந.க.எண்.18281/2016/DO1 நாள்.29.12.2020–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கரூர் நகரில் இரயில்வே இருப்பு பாதைக்கு வடக்கில் அமைந்துள்ள சின்ன குளத்துபாளையம், பெரிய குளத்துபாளையம் போன்ற பகுதிகளில் குடியிருக்கும் பொதுமக்கள் அனைவரும் பேருந்து நிலையம் மற்றும் வணிகப்பகுதிகளுக்கு செல்வதற்கு பெரிய குளத்துபாளையம் குகை வழிப்பாதை (Sub way) வழியாக தனியார் இடங்கள், எல்.என்.எஸ் கிராமம் புல எண்.336 அரசு புறம்போக்கு கரை, கரூர் கிராமம் புல எண்.331/4 அரசு புறம்போக்கு வாரி மற்றும் 331/1 அரசு புறம்போக்கு வண்டி பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட இடங்கள் வழியாக ஏற்கனவே புழக்கத்தில் உள்ள மண் சாலையை பயன்படுத்தி வருகின்றனர். அவ்வாறு பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் சாலை அமைந்துள்ள ஒரு பகுதியான தனியார் நில உரிமையாளர்கள் KFW திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இனாம் கரூர் பகுதிக்கு குடிநீர் குழாய் கொண்டு செல்ல இரண்டு பிரதான குழாய்கள் அமைக்க நகராட்சிக்கு இடங்களை தான பத்திரம் மூலமாக வழங்கியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து தனியார் இடங்கள் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களானகரூர் கிராமம் புல எண்கள்.331/1,331/4 மற்றும் எல்.என்.எஸ் கிராமம் 336–ல் முழு நீளத்திற்கும் KFW திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இனாம் கரூர் பகுதிக்கு பிரதான இரண்டு குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கரூர் கிராமம் புல எண்.331/4 வாரி அரசு புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்ட இடமானது மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் கரூர் அசல் வழக்கு எண்.375/1991, தீர்ப்புரை நாள்.06.04.1992ன்படி தங்களுக்கு தான் சொந்தம் என திரு என்.நித்தியகுமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.W.P.(MD) No. 14328/2020ல் வழக்கு தொடர்ந்து நகராட்சி மூலம் பணிகள் செய்யக் கூடாதென இடைகால தடை உத்திரவு பெற்றுள்ளார். மேற்கண்ட இடமானது அரசு புறம்போக்கு என்பதால் பட்டா வழங்க இயலாது என மாவட்ட வருவாய் அலுவலர் கரூர் அவர்களின் செயல்முறை ந.க.சி1/11688/2019 நாள்.26.09.2019–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்.WP(MD) No.26372/2018 ல் மாவட்ட வருவாய் அலுவலர் கரூர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவினை எதிர்த்து தடை உத்தரவு பெற்றுள்ளார். மேலும் மாவட்ட ஆட்சி தலைவர் கரூர் அவர்களால் வழக்கு எண்.ஓ.எஸ்.375/1991–ல் வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மேற்படி இடம் அரசு புறம்போக்கு இடம் தான் என கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.ஓ.எஸ்.366/2020 வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்கண்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.W.P.(MD) No. 14328/2020 ல் வழக்கில் நகராட்சி சார்பாக மேற்படி இடம் அரசு புறம்போக்கு வாரி என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் தான் நகராட்சியால் வடிகால் கட்டப்பட உள்ளது என எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் வழக்குகள் மனுதாரருக்கு சாதகமாக அமையும்பட்சத்தில் இடத்திற்கான இழப்பீடு தொகையை நகராட்சி மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிமொழி ஆவணம் தாக்கல் செய்யும்படி தெரிவிக்கப் பட்டுள்ளது.

கரூர் கிராமம் புல எண்.331/4–ல் KFW திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இனாம் கரூர் பகுதிக்கு பிரதான இரண்டு குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளதாலும், பெரிய குளத்துபாளையம் குகை வழிப்பாதை (Sub way) யிலிருந்து பெரியார் நகர் வரை வடிகால் மற்றும் இணைப்பு சாலை அமைப்பது அத்தியாவசியமாகிறது என்பதாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களால் அசல் வழக்கு எண்.375/1991ல்

வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.ஓ.எஸ்.366/2020 மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்.WP(MD).No.26372/2018ல் மாவட்ட வருவாய் அலுவலர் கரூர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவினை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு என இரண்டு வழக்குகளில் வழங்கப்பட இருக்கும் தீர்ப்பின் அடிப்படையில் கரூர் கிராமம் புல எண்.331/4—ல் சுமார் 16செண்ட் இடத்தினை நில ஆர்ஜிதம் செய்வது குறித்து உறுதிமொழி ஆவணம் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சி மூலம் நீதிமன்றத்தில் உடனடியாக தாக்கல் செய்ததற்கு பின்னேற்பு அனுமதியும், நில ஆர்ஜிதம் செய்யும் நிலைமை ஏற்படின் அதற்காக நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழியாக அரசைக் கேட்டுக்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1)அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நீதிமன்றத்தில் உறுதிமொழி ஆவணம் தாக்கல் செய்ததற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம் .

2)மேலும் நில ஆர்ஜிதம் செய்யும் நிலைமை ஏற்படின் அதற்காக நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழியாக அரசைக் கேட்டுக்கொள்ளலாம்.

(எப்1/ 6963/2017)

தீர்மான எண்.169 அனுமதிக்கப்பட்டது.

37)கரூர் நகர எல்லைக்குள் இனாம் கரூர் கிராமம், சர்வே எண்கள்.290/23A, 30,31 -ல் 0.39 ஏக்கர் பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு.P.பிரேம்குமார் மற்றும் 3 நபர்கள் நகராட்சிக்கு விண்ணப்பத்தினை தொடர்ந்து மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதினை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21/2020/கமா, நாள்.19.11.2020ல் சாலை அமைப்பு வரைபடம் தயார் செய்து வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைத்து நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மனைப்பிரிவு உரிமையாளரால் தார்சாலை, வடிகால் வசதி, குடிநீர் குழாய் மற்றும் மின்விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் சாலையை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளலாம் என நகராட்சி பொறியாளர் அவர்களின் 20.02.2021—ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தினை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :—</u>

மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/10328/2019)

தீர்மான எண்.170 அனுமதிக்கப்பட்டது.

38)கரூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் புதிய மருத்துவ காப்பீட்டுத் தொகை மாதம் ஒன்றுக்கு ஒரு பணியாளர் ரூ.180/— மற்றும் சேவை வரி ஆகியவை 2020—2021ம் ஆண்டுக்கு கீழ்க்கண்டவாறு அரசு தலைப்பில் செலுத்த வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | 2020—2021ம் ஆண்டு மொத்த பணியாளர்கள் | 354 |
| 2 | ஒரு நபருக்கு சந்தாத் தொகை ரூ.180 x 12 மாதம் | ரூ.2160/— |
| 3 | மொத்த பணியாளர்கள் 354 x 2160 (ஒரு வருடம்) | ரூ.7,64,640/— |
| 4 | சேவை வரி 18% | ரூ.1,37,635/— |
| | மொத்தம் | ஒரு வருட சந்தாத் தொகை + சேவை வரி |
| | | ரூ.7,64,640/— + ரூ.1,37,635/— |
| | மொத்தம் | ரூ.9,02,275/— |

2020—2021ம் ஆண்டிற்கான தொகை ரூ.9,02,275/—யை அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (பி3/2020)

தீர்மான எண்.171 அனுமதிக்கப்பட்டது.

39)நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடித ந.க.எண் 3624/2019/தி.ம2 நாள்.06.06.2020 தேதியிட்ட கடிதத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சட்டப் பேரவைஅறிவிப்பின்படி மாவட்டவாரியான நகர் ஊரமைப்புத் துறையின் சார்நிலை அலுவலங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதினை தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் நகர் ஊரமைப்பு அலுவலகம் உடனடியாக தொடங்கிட கரூர் நகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில் 1500 முதல் 2000 சதுரடி பரப்பளவு கொண்ட கட்டிடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரப்பட்டது. அதனடிப்படையில் ஏற்கனவே காலியாகவுள்ள இந்நகராட்சி இனாம் கரூர் வரிவசூல் மையத்தின் முதல் தளத்தின் ஒரு பகுதியினை பொதுப் பணித்துறையின் அலகின்படி நிர்ணயம் செய்யும் வாடகைத் தொகையினை செலுத்த சம்மதம் கோரப்பட்டது. ஆதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் 06.07.2020—ம் தேதிய கடிதத்தில் அரசு நிர்ணயம் செய்யும் வாடகையினை செலுத்த சம்மதம் தெரிவித்தின்பேரிலும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களின் சட்டப் பேரவை அறிவிப்பின்படி மாவட்டவாரியான நகர் ஊரமைப்பு துறையின் சார்நிலை அலுவலங்கள் உடனடியாக துவக்க வேண்டியுள்ள காரணத்தினால், இந்நகர் மன்ற தீர்மான எண்.2301 நாள்31.07.2020—ல் ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டதின் பேரில், இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.2451/2020/அ6 நாள்.13.08.2020—ன்படி 15.07.2020 முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களின் சட்டப் பேரவை அறிவிப்பின்படி கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உடனடியாக செயல்பட வேண்டிய காரணத்தினால் இந்நகராட்சிக்கு சொந்தமான இனாம்கரூர் வரிவசூல் மையத்தின் முதல் தளத்தில் 1330 சதுரடி கட்டிடத்தினை பொதுப்பணித் துறையின் அலகின்படி நிர்ணயம் செய்யப்பட்ட மாதவாடகை அடிப்படையில் கரூர் நகர ஊரமைப்பு அரசு அலுவலக பயன்பட்டிற்காக அவசர அவசியம் கருதி வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும், பொதுபணித் துறையின் அலகின்படி நிர்ணயம் செய்யப்பட்ட மாதவாடகை ரூ.13,365/—க்கு நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், சேலம் அவர்களின் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரி மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம். (அ6/2451/2020)

தீர்மான எண்.172 அனுமதிக்கப்பட்டது.

40)கரூர் முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு தேயிலை தோட்டக்கலை நிறுவனம் தனது தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக 8X8 அளவில் பங்க் ஸ்டால் அமைக்க காலியிடம் கோரியுள்ளார்கள். மேற்படி பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில் அம்மா குடிநீர் விற்பனையகத்திற்கு அருகில் உள்ள காலியிடத்தில் பங்க் ஸ்டால் அமைக்க பொது பணித்துறை மற்றும் சார்பதிவாளர் வழிகாட்டு மதிப்பிட்டில் வாடகை நிர்ணயம் செய்வதற்கு சேலம் மண்டல நகராட்சி செயற்பொறியாளரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம். (அ6/2020)

தீர்மான எண்.173 அனுமதிக்கப்பட்டது.

41)கரூர் நகராட்சி சாலை பாதுகாப்பு நிதி 2020—2021 **நிதியின்கீழ்** புதிய Mini Mast விளக்குகள் பொருத்தி அமைத்தல், 150 வாட்ஸ் MHL விளக்குகளுக்கு பதிலாக 120 வாட்ஸ் LED விளக்குகள் பொருத்துதல் (பஸ் ரவுண்டானா முதல் சர்ச் கார்னர் வரை) மற்றும் தானியங்கி சுவிட்சுகள் பொருத்துதல் (Entire Karur Municipality) பணிக்கு முதன்முறையாக 29.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00லட்சம்</u>

1. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 4.96% சதம் அதிகம்
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 10.08% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1) மேற்படி திட்டப்பணிக்கு சாலை பாதுகாப்பு நிதி 2020–2021 திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மான்யத் தொகை ரூ.25.00 இலட்சம் செலவு செய்து கொள்ள மன்றம் தீர்மானம் எண். 16, நாள். 20.01.2021 ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, Karur என்பவர் மதிப்பீட்டினை விட கூடுதலான சதவீகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார் மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளி விலை விபரத்தினை குறைத்து தரக்கோரி (Notification) இவ்வலுவலக கடித ந.க.எண்.இ3/13293/2020, நாள்.29.01.2020ன் மூலம் கோரியதில் ஒப்பந்ததாரர் 02.02.2021 தேதிய கடிதத்தில் இப்பணிக்கான மின் உபகரணங்கள், மற்றும் கேபிள்களின் வெளிச்சந்தை விலை விகிதம் 20% முதல் 40% வரை உயர்ந்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து முடிவறிக்கையினை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக்கொள்ளவும், மதிப்பீட்டினைவிட கூடுதலான ஒப்பந்தப்புள்ளியின் தொகை 5% தொகைக்குள் நகர்மன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் குறைந்த தொகையுடைய PRG Construction, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ3/13293/2020)

தீர்மான எண்.174 அனுமதிக்கப்பட்டது.

42)கரூர் நகராட்சி சாலை பாதுகாப்பு நிதி 2020–2021 **நிதியின்கீழ்** புதிய Mini Mast விளக்குகள் பொருத்தி அமைத்தல், 150 வாட்ஸ் MHL விளக்குகளுக்கு பதிலாக 120 வாட்ஸ் LED விளக்குகள் பொருத்துதல் (ICICI வங்கி முதல் திருமாநிலையூர் ரவுண்டானா வரை) பணிக்கு முதன்முறையாக 29.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00லட்சம்</u>

1. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 4.96% சதம் அதிகம்
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 10.09% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1) மேற்படி திட்டப்பணிக்கு சாலை பாதுகாப்பு நிதி 2020–2021 திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மான்யத் தொகை ரூ.25.00 இலட்சம் செலவு செய்து கொள்ள மன்றம் தீர்மானம் எண்.16 நாள்.20.01.2021ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, Karur என்பவர் மதிப்பீட்டினை விட கூடுதலான சதவீகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார் மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளி விலை விபரத்தினை குறைத்து தரக்கோரி (Notification) இவ்வலுவலக கடித ந.க.எண்.இ3/13293/2020, நாள்.29.01.2020ன் மூலம் கோரியதில் ஒப்பந்ததாரர் 02.02.2021 தேதிய கடிதத்தில் இப்பணிக்கான மின் உபகரணங்கள், மற்றும் கேபிள்களின் வெளிச்சந்தை விலை விகிதம் 20% முதல் 40% வரை உயர்ந்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து முடிவறிக்கையினை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக்கொள்ளவும், மதிப்பீட்டினைவிட கூடுதலான ஒப்பந்தப்புள்ளியின் தொகை 5% தொகைக்குள் நகர்மன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் குறைந்த தொகையுடைய PRG Construction, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ3/13293/2020)

தீர்மான எண்.175 அனுமதிக்கப்பட்டது.

43) கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான இலகுரக வாகனங்கள் TN 47 AL 6741, TN 47 AL 6770, TN 47 AL 6703, TN 47 AL 67873, TN 47 AL 6784, TN 47 AL 6793, TN 47 AL 6727, TN 47 AL 6774, TN 47 AL 6711, TN 47 AL 6729 மற்றும் TN 47 AL 6739 ஆகிய வாகனங்களுக்கு 2021ம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க அங்கீகாரம் பெற்ற பணிமனை மூலம் பழுதுகள் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், எதிர்வரும் சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதால் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்கும் வண்ணம் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி வாகனத்திற்கு உத்தேசமாக ஒரு வாகனத்திற்கு ரூ.85,000/– வீதம் பதினொரு இலகு ரக வாகனங்களுக்கு ரூ.9.35லட்சம் செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு சொந்தமான இலகு ரக வாகனங்களுக்கு 2021ம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க பழுதுகள் மற்றும் பணிகள் செய்து கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.9.35இலட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)அரசின் உச்சவரம்பிற்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/90/2021)

தீர்மான எண்.176 அனுமதிக்கப்பட்டது.

44)கரூர் நகராட்சி பொறியர் பிரிவு எண்.TN47 AH 6364 ஈப்பு வாகனத்திற்கு (மகேந்திரா ஸ்கார்ப்பியோ) 2021–2022–ம் ஆண்டிற்கு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மகேந்திரா & மகேந்திரா வாகனத் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிட்டெட், கரூர் அவர்களின் நேரடியாக விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சம் (ஐந்து லட்சத்திற்கு) குடிநீர் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/2061/2019)

தீர்மான எண்.177 அனுமதிக்கப்பட்டது.

45)கரூர் நகராட்சி சாலை பாதுகாப்பு நிதி 2020–2021 **நிதியின்கீழ்** புதிய Mini Mast விளக்குகள் பொருத்தி அமைத்தல், புதிய 90 வாட்ஸ் மாற்றி (Existing Pole) அமைத்தல், தானியங்கி சுவிட்சுகள் (Entire Karur Municipality) பொருத்துதல் (வாங்கப்பாளையம் முதல் அரசு காலனி வரை) பணிக்கு முதன்முறையாக 29.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00லட்சம்</u>

1. PRG Construction, Karur மதிப்பீட்டை விட 4.96% சதம் அதிகம்
2. RPS Construction, Karur மதிப்பீட்டை விட 10.10% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1) மேற்படி திட்டப்பணிக்கு சாலை பாதுகாப்பு நிதி 2020–2021 திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மான்யத் தொகை ரூ.25.00 இலட்சம் செலவு செய்து கொள்ள மன்றம் தீர்மானம் எண்16, நாள். 20.01.2021 ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள PRG Construction, Karur என்பவர் மதிப்பீட்டினை விட கூடுதலான சதவீகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார் மேலும் இவரது ஒப்பந்தப்புள்ளி விலை விபரத்தினை குறைத்து தரக்கோரி (Notification) இவ்வலுவலக கடித ந.க.எண்.இ3/13293/2020, நாள்.29.01.2020ன் மூலம் கோரியதில் ஒப்பந்ததாரர் 02.02.2021 தேதிய கடிதத்தில் இப்பணிக்கான மின் உபகரணங்கள், மற்றும் கேபிள்களின் வெளிச்சந்தை விலை விகிதம் 20% முதல் 40% வரை உயர்ந்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையினை குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து முடிவறிக்கையினை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக்கொள்ளவும், மதிப்பீட்டினை விட கூடுதலான ஒப்பந்தப்புள்ளியின் தொகை 5% தொகைக்குள் நகர்மன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் குறைந்த தொகையுடைய PRG Construction, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ3/13293/2020)

தீர்மான எண்.178 பதிவு செய்யப்பட்டது.

46)கரூர் நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் பிரதானக் குழாய்கள் அரசு காலனியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படுகிறது. இதில் இரத்தினம் சாலையில் மனித ஆய்வுக்குழி எண்.28 மற்றும் மனித ஆய்வுக்குழி 29க்கும் இடைப்பட்ட 30 மீ நீளத்தில் பதிக்கப்பட்டுள்ள 800மி.மி விட்டமுள்ள RCC குழாய்கள் பழுதடைந்து கழிவுநீர் வெளியேற வழியில்லாமல் மண் உள் வாங்கி சாலையில் பெரும்பள்ளம் ஏற்பட்டு பொதுமக்கள் மற்றும் வாகனப் போக்குவரத்து செல்ல இயலாமல் மிகுந்த சிரமமாக உள்ளது. பொதுசுகாதார நலன் கருதி பழுதடைந்த குழாய்களை அகற்றி விட்டு புதிய 800 மி.மி விட்டமுள்ள RCC குழாய்கள் அமைக்கும் பணிக்கு **ரூ.6.15 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள N.Nedunchezhian, Chennai அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.5,91,669/-யை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | N.Nedunchezhian, Chennai | 0.21% குறைவு |
| 2) | Chinnammal Enterprises, Manapparai | 1.20% அதிகம் |
| 3) | Sri.Ambal Enterprises, Chennai | 2.15% அதிகம் |

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/5826/2020)

தீர்மான எண்.179 பதிவு செய்யப்பட்டது.

47)கரூர் நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் பிரதானக் குழாய்கள் இராணி மங்கம்மாள் சாலையில் மனித ஆய்வுக்குழி எண்.63 மற்றும் மனித ஆய்வுக்குழி 64க்கும் இடைப்பட்ட 30மீ நீளத்தில் பதிக்கப்பட்டுள்ள 800மி.மி விட்டமுள்ள RCC குழாய்கள் பழுதடைந்து கழிவுநீர் வெளியேற வழியில்லாமல் மண் உள் வாங்கி சாலையில் பெரும்பள்ளம் ஏற்பட்டு பொதுமக்கள் மற்றும் வாகனப் போக்குவரத்து செல்ல இயலாமல் மிகுந்த சிரமமாக உள்ளது. பொதுசுகாதார நலன் கருதி பழுதடைந்த குழாய்களை அகற்றி விட்டு புதிய 800 மி.மி விட்டமுள்ள RCC குழாய்கள் அமைக்கும் பணிக்கு **ரூ.8.80 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள N.Nedunchezhian, Chennai அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.8,54,978/-யை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | N.Nedunchezhian, Chennai | 0.18% குறைவு |
| 2) | Chinnammal Enterprises, Manapparai | 0.89% அதிகம் |
| 3) | Sri.Ambal Enterprises, Chennai | 1.89% அதிகம் |

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/5821/202)

தீர்மான எண்.180 பதிவு செய்யப்பட்டது.

48)கரூர் நகராட்சி வார்டு எண்.15 பாலம்மாள்புரம் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய்களை ஆய்வு செய்து மீண்டும் குழாய்களை இணைப்பு செய்யும் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீடுத் தொகை ரூ.3.00லட்சம்</u>

1. Shanmuga Electricals & Engineering works, Karur மதிப்பீட்டை விட 0.13% சதம் குறைவு
2. Saravana Electricals & Hardwares, Karur மதிப்பீட்டை விட 3.24% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1 மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.5, நாள்.02.01.2021ம் தேதி ரூ.3.00 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Shanmuga Electricals & Engineering works, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ2/324/2021)

தீர்மான எண்.181 அனுமதிக்கப்பட்டது.

49)கரூர் நகராட்சி பொறியர் பிரிவு வாகன எண்.TN47 AH8887–ஈப்பு வாகனத்திற்கு (மகேந்திரா பொலிரொ) 2021–2022–ம் ஆண்டிற்கு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மகேந்திரா & மகேந்திரா வாகனத் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிட்டெட், கரூர் அவர்களின் நேரடியாக விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சத்தினை (ஐந்து லட்சத்திற்கு) குடிநீர் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/4437/2020)

தீர்மான எண்.182 அனுமதிக்கப்பட்டது.

50)கரூர் நகராட்சி பொறியர் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவின்கீழ் இயங்கி வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2021–2022ம் ஆண்டிற்கான சாலை வரி, பசுமை வரி, தொழிலாளர் நல நிதி கட்டணம் மற்றும் சேவை கட்டணம் ஆகிய இனங்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதால் இதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00லட்சம் பொது நிதியிலிருந்தும் மற்றும் ரூ.1.00லட்சம் குடிநீர் நிதியிலிருந்தும் செலவு மேற்கொள்ளவும் மேலும் கட்டணத்தினை வலைத்தளம் வழியாக கணினியில் பதிவேற்றம் செய்து செலுத்துவதற்கு ஆகும் செலவினத் தொகையினை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/1577/2014)

தீர்மான எண்.183 அனுமதிக்கப்பட்டது.

51)கரூர் நகராட்சி பொறியர் பிரிவு எண்.TN47 AB 7476 ஈப்பு வாகனத்திற்கு (மகேந்திரா ஸ்கார்ப்பியோ) 2021–2022–ம் ஆண்டிற்கு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மகேந்திரா & மகேந்திரா வாகனத் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட், கரூர் அவர்களின் நேரடியாக விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00லட்சத்தினை (ஐந்து லட்சத்திற்கு) குடிநீர் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/8709/2019)

தீர்மான எண்.184 அனுமதிக்கப்பட்டது.

52)கரூர் நகராட்சி பொறியர் பிரிவின் மூலமாக பராமரிக்கப்பட்டு வரும் மகேந்திரா ஸ்கார்பியோ வாகன எண்.TN47 AH 6364 வாகனத்திற்கு டயர்கள் பழுதாகிவிட்டதால் புதிய 4டயர்கள் சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.60000/–க்கு குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/2061/2019)

தீர்மான எண்.185 அனுமதிக்கப்பட்டது.

53)கரூர் நகராட்சி பொறியர் பிரிவின் மூலமாக பராமரிக்கப்பட்டு வரும் மகேந்திரா ஸ்கார்பியோ வாகன எண்.TN47 AH 6364 வாகனத்திற்கு டயர்கள் பழுதாகிவிட்டதால் புதிய 4டயர்கள் சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு ரூ.60000/– மதீப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் 25.02.2021–ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றது, வரபெற்ற விலைப்புள்ளிகள் மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | F1 Cars<br>Erode Main Road (KPN Nagar) OppHari coach. Karur - 639002 | 55200 |
| 2 | ThiruKumaranTyers,<br>28/G30/1A, 1B, Ram Nagar, New Salem bypass Road, Karur-639002 | 56000 |
| 3 | M.S.P Tyres,<br>171-A, Salem Road, Opp.MuruganKovil,<br>Namakkal-637001 | 54400 |

அலுவலக குறிப்பு,
மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளியினை அளித்துள்ள F1 கார்ஸ் கரூர் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலம். (எச்5/2061/2019)

தீர்மான எண்.186 அனுமதிக்கப்பட்டது.

54)கரூர் நகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி பகுதி வார்டு எண்.34 மற்றும் 35 தில்லை நகர் தெற்கு, நரிக்கட்டியூர் தெற்கு, தனலெட்சுமி நகர், சபரி கார்டன் பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தால் குடிநீர் இணைப்பிற்கு விண்ணப்பித்தவர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க இயலவில்லை. எனவே, புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதியியில செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/3815/2021)

தீர்மான எண்.187 அனுமதிக்கப்பட்டது.

55)அரசாணை (நிலை) எண்.69 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி3) துறை நாள்.04.05.1998ன்படி இந்நகராட்சியின் வார்டு எண்.1 முதல் 48 வரை உள்ள பல்வேறு வகையான 9321 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை கடந்த 2018 – 2019ம் ஆண்டில் தனியார் மூலம் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.122.38 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நகர்மன்ற தீர்மான எண்.951, நாள்.05.07.2018ன் ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின்படி தனியார் வசம் தெருவிளக்குகளை ஒப்படைத்து பராமரிக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13899/2016/DO1, நாள்.14.08.2018ல் அனுமதி பெற்று 12.09.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற M/s PRG Construction, Karur என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற தீர்மான எண்.1109, நாள்.15.10.2018ல் ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.10042/இ3/2017, நாள்.20.09.2018ன்படி 25.09.2018 முதல் 24.09.2019 வரையிலான காலத்திற்கு தெருவிளக்கு பராமரிக்கும் பணியினை ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒரு வருட காலத்திற்கான தெருவிளக்குகள் பராமரிப்பதற்கான காலம் முடிவு பெற்றதினால் தனது ஒப்பந்தப்பணியினை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து உத்திரவு வழங்குமாறு ஒப்பந்ததாரர் தனது 04.09.2019ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். மேலும் மேற்படி ஒப்பந்ததாரர் தெருவிளக்குகளை பராமரிக்கும் ஒரு வருட காலத்தில் தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை சீராக பராமரித்து வந்தததின் அடிப்படையிலும், மின் கண்காணிப்பாளர் குறிப்பின்படியும் தெருவிளக்குகள் இயக்குதல் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்ததாரரை தேர்வு செய்து பணியினை ஒப்படைத்து மேற்கொள்வது மூன்று ஆண்டுகள் வரை அவரது பணியின் தன்மை மற்றும் நடவடிக்கை குறித்து நீட்டித்து கொள்ள வழிமுறைகள் உள்ளதால் மேற்படி ஒப்பந்ததாரரை தொடர்ந்து ஓராண்டு காலத்திற்கு 25.09.2019 முதல் 24.09.2020 வரையிலான காலத்திற்கு தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை 12.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரப்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்படைக்க நகர்மன்ற தீர்மான எண்.1109, நாள்.15.10.2018ன்படி பணியானது ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 25.09.2020ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 10.09.2020ம் தேதிய கடிதத்தில் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கோரியதின்படி ஒப்பந்ததாரர் 12.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விவரத்தின் அடிப்படையில் மேலும் ஆறு மாத காலத்திற்கு மட்டும் 25.09.2020 முதல் 24.03.2021 முடிய தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை 10.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விபரத்தின்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்படைக்க நகர்மன்ற தீர்மான எண்.2476, நாள்.23.09.2020ன்படி பணியானது ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 24.03.2021ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி ஒப்பந்ததாரர் தனது 04.02.2021ம் தேதிய கடிதத்தில் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கோரியதின்படி ஒப்பந்ததாரர்

12.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விவரத்தின் அடிப்படையில் மேலும் மூன்று மாத காலத்திற்கு மட்டும் 25.03.2021 முதல் 24.06.2021 முடிய தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.28.93 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி 6மாத காலத்திற்கு (25.03.2021 முதல் 24.06.2021 வரையிலான காலத்திற்கு) தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியினை 12.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்திற்கு பராமரிப்பு பணிகளை ஒப்படைக்கவும் அதற்காக ரூ.28.93இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி பணியினை ஒப்பந்ததாரர் PRG Construction, Karur அவர்களிடம் ஒப்படைத்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.28.93 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ3/10042/2017)

தீர்மான எண்.188 அனுமதிக்கப்பட்டது.

56) கரூர் நகராட்சி வார்டு எண்.15 முதல் 32 வரை உள்ள குடிநீர் பகிர்மான குழாய், மெயின் குழாய் வால்வுகள் மராமத்து பணி செய்தல் பணிக்கு முதன்முறையாக 23.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00லட்சம்</u>

1. Shanmuga Electricals & Engineering works, Karur மதிப்பீட்டை விட 0.10% சதம் குறைவு
2. Saravana Electricals & Hardwares, Karur மதிப்பீட்டை விட 3.22% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.11, நாள்.20.01.2021ம் தேதி ரூ.9.00 இலட்சத்தில் நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Shanmuga Electricals & Engineering works, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ2/323/2021)

தீர்மான எண்.189 அனுமதிக்கப்பட்டது.

57)அரசாணை எண்.128 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.07.2010 (கரூர்) , அரசாணை எண்.129 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 14.07.2010 (இனாம் கரூர்) மற்றும் அரசாணை எண்.132 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.07.2010 (தாந்தோணி) ஆகிய அரசாணையின்படி Kfw திட்டத்தில் கரூர் நகராட்சிக்குட்பட்ட கரூர், இனாம்கரூர் மற்றும் தாந்தோணி ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டப்பணிகளை மேற்கொள்ள கீழ்காணும் விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு விரிவான திட்ட மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தயார் செய்யப்பட்டு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | திட்ட விபரம் | நிதி பங்கீட்டு விபரம் (ரூ.கோடியில்) | | | மொத்த மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|---|
| | | KFW / ET திட்ட மான்யம் | TNUDF கடன் தொகை | நகராட்சி பங்கு தொகை | |
| 1 | குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் (WSIS Kfw Scheme) கரூர் பகுதி | 7.40 | 14.80 | 2.47 | ரூ.24.67 கோடி |
| 2 | குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் (WSIS Kfw Scheme) இனாம்கரூர் பகுதி | 5.57 | 11.14 | 1.86 | ரூ.18.57 கோடி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் (WSIS Kfw Scheme) தாந்தோணி பகுதி | 11.57 | 10.18 | 3.41 | ரூ.25.16 கோடி |

மேற்படி திட்டப் பணிகள் சம்மந்தமாக 18.12.2020–ம் தேதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் கரூர், இனாம் கரூர் மற்றும் தாந்தோணி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முகுறு திட்டத்தின்கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளை குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் முடிக்கப்படாததால் மேற்படி பணியினை முடிப்பதற்கு கால நீட்டிப்பு செய்வதற்காக Residual Compensation charges கீழ்க்கண்ட பகுதிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை நிர்வாக இயக்குநர் / முதன்மை செயல் அலுவலர் சென்னை அவர்களுக்கு செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Scheme | Funded under | Amount |
|---|---|---|
| Thanthoni – water Supply Improvement Scheme | SMIF-TN-II-I | 16,880 |
| Karur –water supply Improvement Scheme | SMIF-TN-II-I | 1,89,902 |
| Inam Karur – Water Supply Improvement Scheme | SMIF-TN-II-I | 2,02,140 |
| Total | | 4,08,922 |

எனவே KFW திட்டத்தின்கீழ் கரூர், இனாம்கரூர் மற்றும் தாந்தோணி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக கால நீட்டிப்பு செய்வதற்கான தொகை Residual Compensation charges ரூ.4,08,922/– ஐ நிர்வாக இயக்குநர்/ முதன்மை செயல் அலுவலர் TNUDF சென்னை அவர்களுக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.மேலும் கரூர் மற்றும் இனாம் கரூர் பகுதியில் குடிநீர் அபிவிருத்தி பணியினை மேற்கொள்ள ஏதுவாக காலநீட்டிப்பு செய்வதற்கான தொகை ரூ.2,06,782/– KFW நிதியில் கரூர் மற்றும் இனாம் கரூர் பகுதியில் போதுமான தொகை இல்லாத காரணத்தினால் தாந்தோணி பகுதிக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிக்காக வரப்பெற்ற தொகையில் மேற்படி தொகை ரூ.2,06,782/–ஐ செலுத்துவதற்கும் கரூர் மற்றும் இனாம் கரூர் பகுதிக்கு உண்டான தொகை வரப்பெற்றவுடன் மேற்படி தொகையினை தாந்தோணி பகுதிக்கு ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2020)

தீர்மான எண்.190 அனுமதிக்கப்பட்டது.

**58)**கரூர் நகராட்சியின் கணிணிகளுக்கு தேவையான டோனர்கள், உபகரணங்கள் 01.04.2021 முதல் 31.03.2022 முடிய ஒரு ஆண்டிற்கு அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களில் வாங்க ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.30,00,000/– (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். (பி7/2021)

தீர்மான எண்.191 அனுமதிக்கப்பட்டது.

**59)**கரூர் நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு மற்றும் அனைத்து வசூல் மையங்களும் பண மதிப்புள்ள ரசீதுகள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள், எழுதுபொருட்கள் மற்றும் தேர்தல் பணியினை எதிர்நோக்கியும் பொருட்கள் வாங்க 2021–2022ம் ஆண்டிற்கு அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களில் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.30,00,000/– (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். (பி7/2021)

தீர்மான எண்.192 அனுமதிக்கப்பட்டது.

**60)**கரூர் நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை திட்டம் கழிவுநீரேற்று நிலையம் பாலாம்பாள்புரத்தில் உள்ள மின்மாற்றிகள் (500KVA Transformer) I & II oil Califorutation செய்து மின்மாற்றிகள் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து BDV Test செய்து சான்றிதழ் பெற்று

மேலும் பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ள வேண்டி நகர்மன்ற தீர்மான எண்.2366 நாள்.31.08.2020ல் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/–க்கு நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி பெறப்பட்டது. ஆனால் மேற்படி பணியானது நகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியிருப்பதால் மேற்படி பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50லட்சத்தை நகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/–யை நகராட்சி புதைவடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/3003/2020)

தீர்மான எண்.193 அனுமதிக்கப்பட்டது.

61)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சி வார்டு எண்.2 திருக்காம்புலியூர் பகுதியில் தங்கும் விடுதி அமைக்கும் பணிக்கு முதல் முறையாக 24.01.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00லட்சம்</u>

1) திரு.PRG Construction, கரூர். மதிப்பீட்டைவிட 0.10 % சதம் குறைவு
2) திரு.RPS Construction கரூர் மதிப்பீட்டைவிட 2.97% சதம் அதிகம்

அலுவலகக் குறிப்பு
1)மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/2931/2018 நாள்.13.11.2018ல் ரூ.15.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2)மேற்படி பணிக்கு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் பணி ஆணை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3)மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.PRG Construction கரூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(இ1/945/2018)

தீர்மான எண்.194 அனுமதிக்கப்பட்டது.

62)நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண்.30322/2012/இ3 நாள்.15.02.2020ம் தேதிய கடிதத்தில் நகராட்சிகளின் நிதி பங்களிப்புடன் புதிய நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் கட்டுவதற்கு நகராட்சிகளின் மூலம் வழங்க வேண்டிய நிதி பங்களிப்பினை மாநில நிதிக்குழு பரிந்துரை மானியத்திற்கு 4வது தவணைத் தொகை ரூ.4,53,330/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (பி2/4249/2013)

தீர்மான எண்.195 அனுமதிக்கப்பட்டது.

63)ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018–2019ன்கீழ் கரூர் நகராட்சி வார்டு எண்.37 மாரியம்மன் கோவில் முதல் திருச்சி ரோடு தெரசா பள்ளி வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி ரூ.155.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை (எம்.எஸ்) என்.82, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ.II) நாள்.23.08.2018 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கப்பட்டு மதிப்பீட்டிலுள்ள 1300 மீட்டர் நீளத்திற்கு வடிகால் பணிகள் ரூ.132.43 லட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு, மீதி ரூ.22.57 லட்சம் தொகை மீதமுள்ளது.

மேலும், வார்டு எண்.37 திண்ணப்பா நகர் 3, 4, 6வது குறுக்குத் தெரு மற்றும் திண்ணப்பா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி எதிர்புறம் உள்ள தெருக்களில் மழைநீர் வடிகால் இல்லாததால் அப்பகுதிகளுக்கு மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள்

கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பகுதிகளுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.25.00 இலட்சத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.1951, நாள்.29.11.2019ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தாரர் M/S,Sastha Engineering works, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்ற தீர்மான எண்.2358, நாள்.31.08.2020ல் ஒப்புதல் பெறப்பட்டு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கு பதிலாக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018–2019ன்கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மாரியம்மன் கோவில் முதல் திருச்சி சாலை வரை வடிகால் அமைக்கும் பணியில் மீதம் உள்ள மானியத் தொகையை பயன்படுத்தும் வகையில் இந்த வடிகால் அமைக்கப்பட்டுள்ள பகுதியின் அருகிலேயே, வடிகால் வசதி இல்லாமல் கழிவுநீர் தேங்கி பொதுமக்களுக்கு பொது சுகாதார கேடு ஏற்படுத்தும் வகையில் திண்ணப்பா நகர் 3வது குறுக்குத் தெரு, 5வது குறுக்குத் தெரு மற்றும் திண்ணப்பா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி எதிர்புறம் தெருக்களில் புதிதாக வடிகால் அமைத்து, ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வடிகாலில் இணைக்கும் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம். (இ1/9140/2019)

தீர்மான எண்.196 அனுமதிக்கப்பட்டது.

64)கரூர் நகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் சென்று வந்தமைக்கு அதற்கான பயணப்படி செலவுத் தொகை 2019–2020ல் பயணப்படி பெற்றமைக்கு பின்னேற்பும், 2020–2021ம் ஆண்டில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் அலுவலகத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள பயணப்படி தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (பி7/6379/2017)

தீர்மான எண்.197 அனுமதிக்கப்பட்டது.

65)கரூர் நகராட்சியானது சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வந்த நிலையில் அரசாணை எண்.19, நாள் 14.01.2011ன்படி, கரூர் நகராட்சியுடன் சணப்பிரட்டி ஊராட்சி, இனாம்கரூர் மற்றும் தாந்தோணி நகராட்சிகள் இணைத்து பெருநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 53.26சதுர கிலோ மீட்டர் சுற்றளவுடன் 48 வார்டுகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை தொகையான 2,14,412ன் படி தினசரி தேவைப்பட்ட குடிநீரின் அளவு 29.45இலட்சம் லிட்டர் என்ற அடிப்படையில் வாங்கல், நெரூர், கட்டளை ஆகிய பகுதிகளில் காவிரி ஆற்றுப்படுகையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து 19.47 இலட்சம் லிட்டர் குடிநீர் தினசரி பெறப்பட்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90லிட்டர் வீதம் 5 முதல் 7 தினங்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தன.

மேலும் கரூர் நகராட்சி மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் காவிரி குடிநீர் வழங்க, புதிதாக குடிநீர் திட்டம் நிறைவேற்ற அரசாணை எண்.128, 129 மற்றும் 132, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.7.2010ன் படி ஜெர்மன் வங்கியின் நிதியுதவி கீழ் Kfw திட்டத்தில் மூன்று பகுதிகளில் குடிநீர் திட்டப்பணியினை மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | திட்ட விபரம் | நிதி பங்கீட்டு விபரம் (ரூ.கோடியில்) | | | மொத்த மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|---|
| | | KFW / ET திட்ட மான்யம் | TNUDF கடன் தொகை | நகராட்சி பங்கு தொகை | |
| 1 | குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் **(கரூர் பகுதி)** | 7.40 | 14.80 | 2.47 | ரூ.24.67 கோடி |
| 2 | குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் **(இனாம்கரூர் பகுதி)** | 5.57 | 11.14 | 1.86 | ரூ.18.57 கோடி |
| 3 | குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் **(தாந்தோணி பகுதி)** | 11.57 | 10.18 | 3.41 | ரூ.25.16 கோடி |
| | | 24.54 | 36.12 | 7.74 | ரூ.68.40 கோடி |

தற்போது முடிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் நெரூர், மேலமாயனூர் மற்றும் கட்டளை பகுதிகளில் ஆற்றுப்படுகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூன்று குடிநீர் திட்டங்களின் மூலமும் மற்றும் ஏற்கனவே உள்ள நான்கு குடிநீர் திட்டங்கள் மூலம் காவிரி ஆற்றில் இருந்து 32.55இலட்சம் லிட்டர் குடிநீர் தினசரி பெறப்பட்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135லிட்டர் வீதம் 2 முதல் 3 நாட்கள் இடைவெளியில் சுழற்சி முறையில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதனை தவிர கரூர், இனாம்கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் தவிர குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு இந்நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றில் 636 சிறுமின் விசைப்பம்புகள் மற்றும் 8 கூடுதல் திறன் கொண்ட விசைப்பம்புகள் பொருத்தி பொது மக்களுக்கு தேவையான தண்ணீரினை வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான Kfw நிதியுதவியுடன் ''நீடித்த கட்டமைப்பிற்கான நிதி உதவி – தமிழ்நாடு'' திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட குழு 30.06.2010 அன்று நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் கரூர் நகராட்சி, இனாம்கரூர் நகராட்சி மற்றும் தாந்தோணி நகராட்சி ஆகிய மூன்று பகுதிகளிலும் குடிநீர் திட்டப் பணிகள் ரூ.68.40கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியத் தொகை ரூ.24.54கோடி மற்றும் கடன் தொகை ரூ.36.12கோடி TNUDF நிதி நிறுவனம், சென்னை அவர்கள் மூலம் தொகை பெறுவதற்கும் மற்றும் பெறப்பட்ட கடன் தொகையினை அசல் மற்றும் வட்டியுடன் திரும்ப செலுத்துவதற்கும் Cash flow Statement கணக்கீடு செய்யப்பட்டு திட்டம் முழுமையாக முடிவடைந்தவுடன் தற்போது பெறப்பட்டு வரும் குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகையினை உயர்வு செய்து வசூலிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கரூர், இனாம்கரூர் மற்றும் தாந்தோணி நகராட்சிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட குடிநீர் அபிவிருத்தி திட்டதினை செயல்படுத்த அனுமதியளித்துள்ளது. மேற்படி கணக்கீடு செய்து நிர்ணயம் செய்யப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் மற்றும் வைப்புத் தொகையினை உயர்வு செய்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.192, நாள்.28.05.2010 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.222, நாள்.13.07.2010ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | பகுதிகள் | வீட்டிணைப்புகள் | | வணிக உபயோக இணைப்புகள் | |
|---|---|---|---|---|---|
| | | ஏற்கனவே ஒரு மாதத்திற்கு வசூல் செய்யப்பட்டு வரும் குடிநீர் கட்டணம் / ஒரு இணைப்பிற்கான வைப்புத் தொகை | **Kfw** திட்டத்தில் குடிநீர் கட்டணம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் | ஏற்கனவே ஒரு மாதத்திற்கு வசூல் செய்யப்பட்டு வரும் குடிநீர் கட்டணம் / ஒரு இணைப்பிற்கான வைப்புத் தொகை | **Kfw** திட்டத்தில் குடிநீர் கட்டணம் உயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் |
| 1 | கரூர் பகுதி | ரூ.93.00 / ரூ.5000.00 | ரூ.135.00 | ரூ.416.00 / ரூ.10000.00 | ரூ.540.00 |
| 2 | இனாம்கரூர் பகுதி | ரூ.50.00 / ரூ.5000.00 | ரூ.112.00 | ரூ.120.00 / ரூ.9000.00 | ரூ.270.00 |
| 3 | தாந்தோணி பகுதி | ரூ.50.00 / ரூ.5000.00 | ரூ.120.00 | ரூ.130.00 / ரூ.9000.00 | ரூ.320.00 |

மேலும் உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகையினை ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை 10% உயர்வு செய்து வசூலிக்கப்பட வேண்டும் என்று கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்டுள்ள குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகை நிர்ணயம் செய்து 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனவே ஒருங்கிணைந்த கரூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளுக்காக பெறப்பட்டுள்ள கடன் தொகையினை திரும்பி செலுத்திட, குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை உயர்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. தற்போது உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை விபரம் பின்வருமாறு

| வ. எண் | பகுதிகள் | வீட்டிணைப்புகள் | | வணிக உபயோகம் / தொழிற்சாலை இணைப்புகள் | |
|---|---|---|---|---|---|
| | | தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணம் / வைப்புத் தொகை | தற்போது உயர்த்தப்படும் கட்டணம் (குடிநீர் கட்டணம் ரூ.163.35 + மீட்டர் கட்டணம் ரூ.5.00 + Water Cess ரூ.1.65) / வைப்புத் தொகை | தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணம் / வைப்புத் தொகை | தற்போது உயர்த்தப்படும் கட்டணம் (குடிநீர் கட்டணம் ரூ.653.40 + மீட்டர் கட்டணம் ரூ.10.00 + Water Cess ரூ.1.60) / வைப்புத் தொகை |
| 1 | கரூர் பகுதி | ரூ.93.00 / ரூ.5000.00 | ரூ.170.00/ ரூ.6250.00 | ரூ.416.00 / ரூ.10000.00 | ரூ.665.00 / ரூ.12500.00 |
| 2 | இனாம்கரூர் பகுதி | ரூ.50.00 / ரூ.5000.00 | ரூ.170.00/ ரூ.6250.00 | ரூ.120.00 / ரூ.10000.00 | ரூ.665.00 / ரூ.12500.00 |
| 3 | தாந்தோணி பகுதி | ரூ.50.00 / ரூ.5000.00 | ரூ.170.00/ ரூ.6250.00 | ரூ.130.00 / ரூ.10000.00 | ரூ.665.00 / ரூ.12500.00 |
| 4 | சணப்பிரட்டி பகுதி | ரூ.30.00 / ரூ.5000.00 | ரூ.170.00/ ரூ.6250.00 | ரூ.416.00 / ரூ.10000.00 | ரூ.665.00 / ரூ.12500.00 |

தற்போது உள்ள குடிநீர் திட்டங்களை செயல்படுவதற்கான பராமரிப்பு செலவினங்களான தலைமை நீரேற்று நிலையங்கள், நீருந்து நிலையங்கள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பராமரித்தல், மின்மோட்டார்கள் சரி செய்தல், பணியாளர்கள் ஊதியம், மாதந்திர மின்கட்டணம், எரிபொருள் செலவினம் ஆகியவை கூடுதலாக ஏற்படுவதால் தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் குடிநீர் கட்டணங்கள் மூலம் மேற்கொள்ள இயலவில்லை. எனவே Kfw திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் முடிக்கப்பட்ட பகுதிகளான கரூர், இனாம்கரூர், தாந்தோணி பகுதிகளில் புதிதாக உயர்த்தப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை வசூல் செய்து கொள்வதற்கு தற்போது உள்ள குடிநீர் உபவிதி எண்.5, 8எ, 9பி மற்றும் உபவிதி எண்.10 ஆகியவற்றின்படியான குடிநீர் கட்டணத்தை உயர்வு செய்து கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| உப சட்டம் எண் | தற்போது உள்ள குடிநீர் உபவிதிகள் | திருத்தம் செய்யப்பட வேண்டிய குடிநீர் உபவிதிகள் |
|---|---|---|
| 5 | தற்சமயம் உள்ள உப சட்டம் எண்.5க்கு பதிலாக கீழ்க்கண்டவாறு மாற்றப்படும்.<br>ஒரே வளாகத்தில் அதிக எண்ணிக்கையான வீடுகள் கட்டப்பட்டிருந்து அத்தகைய வீடுகள் குழாய் எண்ணிக்கையை விட அதிகரித்தால் அத்தகைய முதல் அதிக வீட்டிற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.45/—ம், அடுத்த ஒவ்வொரு வீட்டிற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.30/—ம் வசூல் செய்யப்படும். | தற்சமயம் உள்ள உப சட்டம் எண்.5க்கு பதிலாக கீழ்க்கண்டவாறு மாற்றப்படும்.<br>ஒரே வளாகத்தில் அதிக எண்ணிக்கையான வீடுகள் கட்டப்பட்டிருந்து அத்தகைய வீடுகள் குழாய் எண்ணிக்கையை விட அதிகரித்தால் ஒவ்வொரு இணைப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.165/—வீதம் வசூல் செய்யப்படும். |
| 8(எ) | தற்போதுள்ள உப சட்டம் 8(எ)க்கு பதிலாக கீழ்க்கண்டவாறு சேர்க்கப்படும் வீட்டு உபயோகத்திற்காக மீட்டர் இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 180லிட்டர் தண்ணீர் இலவசமாக வழங்கப்படும். உபயோகப்படுத்தப்படும் தண்ணீருக்கு 1000 லிட்டருக்கு அதன் பாகத்திற்கு ரூ.7.50 வீதம் | தற்போதுள்ள உப சட்டம் 8(எ)க்கு பதிலாக கீழ்க்கண்டவாறு சேர்க்கப்படும் வீட்டு உபயோகத்திற்காக மீட்டர் இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 180 லிட்டர் தண்ணீர் இலவசமாக வழங்கப்படும். உபயோகப்படுத்தப்படும் தண்ணீருக்கு 1000 லிட்டருக்கு அதன் பாகத்திற்கு ரூ.20.00 வீதம் |

| | | |
|---|---|---|
| | தண்ணீர் கட்டணம் செலுத்த வேண்டும். | தண்ணீர் கட்டணம் செலுத்த வேண்டும். |
| 9(பி) | தற்போதுள்ள உபசட்டம் 9(பி)ல் குழாய் விகிதத்தில் முதல் குழாய் மாதம் 1க்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.60 என்பதற்கு பதிலாக கீழ்க்கண்டவாறு சேர்க்கப்படும்.<br>வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு குறைந்தபட்ச ரூ.90/– வசூல் செய்யப்படும். மீட்டர் கட்டணமாக மாதம் – 1க்கு ரூ.3/– கூடுதலாக வசூலிக்கப்படும். அனைத்து நேர் இணைப்புகளிலும் அளவு மானி கருவி ஏப்ரல்– 2004க்குள் பொருத்தப்பட வேண்டும். அனைத்து குழாய் இணைப்புகளிலும் அளவு மானி கருவி பொருத்தப்பட்டு குழாய் இணைப்புகளுக்கு அளவுமானி முறைப்படி தான் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படும். | தற்போதுள்ள உபசட்டம் 9(பி)ல் குழாய் விகிதத்தில் முதல் குழாய் மாதம் 1க்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.90 என்பதற்கு பதிலாக கீழ்க்கண்டவாறு சேர்க்கப்படும்.<br>வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு குறைந்தபட்ச கட்டணமாக மாதம்–1க்கு ரூ.165/– வசூல் செய்யப்படும். மீட்டர் கட்டணமாக மாதம் –1க்கு ரூ.5/– கூடுதலாக வசூலிக்கப்படும். அனைத்து நேர் இணைப்புகளிலும் அளவு மானி கருவி பொருத்தப்பட வேண்டும். அனைத்து குழாய் இணைப்புகளிலும் அளவு மானி கருவி பொருத்தப்பட்டு குழாய் இணைப்புகளுக்கு அளவுமானி முறைப்படி தான் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படும். |
| 10 | உபசட்டம் 10க்கு பதிலாக கீழ்க்கண்டபடி சேர்க்கப்படும்.<br>1) வீட்டு உபயோகத்திற்கு அல்லாத வணிக சம்பந்தமான காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகள் மீட்டர் பொருத்தப்பட்டு 1000 லிட்டருக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ கட்டணம் ரூ.22.50 வசூலிக்கப்படும். குறைந்தபட்ச குடிநீர் குழாய் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.412.50 என வசூலிக்கப்படும்.<br>2) வீட்டு உபயோகத்திற்கல்லாத தொழிற்சாலை காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தப்பட்டு 1000 லிட்டருக்கோ, அதன் பாகத்திற்கோ ரூ.22.50 வசூலிக்கப்படும். குறைந்தபட்ச குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.337.50 வசூலிக்கப்படும். | உபசட்டம் 10க்கு பதிலாக கீழ்க்கண்டபடி சேர்க்கப்படும்.<br>1) வீட்டு உபயோகத்திற்கு அல்லாத வணிக சம்பந்தமான காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகள் மீட்டர் பொருத்தப்பட்டு 1000 லிட்டருக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ கட்டணம் ரூ.35 வசூலிக்கப்படும். குறைந்தபட்ச குடிநீர் குழாய் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.655 என வசூலிக்கப்படும். மீட்டர் வாடகை கட்டணம் ரூ.10/– கூடுதலாக வசூலிக்கப்படும்<br>2)வீட்டு உபயோகத்திற்கல்லாத தொழிற்சாலை காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தப்பட்டு 1000 லிட்டருக்கோ, அதன் பாகத்திற்கோ ரூ.50 வசூலிக்கப்படும். குறைந்தபட்ச குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.655 வசூலிக்கப்படும். மீட்டர் வாடகை கட்டணம் ரூ.10/– கூடுதலாக வசூலிக்கப்படும் |
| | வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் கட்டண வைப்புத் தொகை ரூ.2500/–<br>வணிக உபயோகத்திற்கு குடிநீர் கட்டண வைப்புத் தொகை ரூ.5000/– | வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் கட்டண வைப்புத் தொகை ரூ.6250/– என்று வசூலிக்கலாம்.<br>வணிக உபயோகத்திற்கு குடிநீர் கட்டண வைப்புத் தொகை ரூ.12500/– என்று வசூலிக்கலாம். |

மேலும் சணப்பிரட்டி பகுதியில் புதிதாக கூடுதல் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தவதற்கான கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டு உரிய ஒப்புதல் பெறுவதற்கு அரசிடம் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் சணப்பிரட்டி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்பு புதிய குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகையினை வசூல் செய்வதற்கு குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி தற்போதுள்ள குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்யப்பட்ட பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உரிய அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1) மேற்படி உபவிதிகளின் திருத்தங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேலும் புதிதாக அமல்படுத்தப்பட்ட குடிநீர் திட்டபணிக்காக பெறப்பட்ட கடன் தொகையினை திரும்ப செலுத்த வேண்டியுள்ளதாலும், குடிநீர் திட்டங்களை செயல்படுவதற்கான பராமரிப்பு செலவினங்களான தலைமை நீரேற்று நிலையங்கள், நீருந்து நிலையங்கள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பராமரித்தல், மின்மோட்டார்கள் சரி செய்தல், பணியாளர்கள் ஊதியம், மாதந்திர மின்கட்டணம், எரிபொருள் செலவினம் ஆகியவை கூடுதலாக ஏற்படுவதால் கூடுதல் நிதிச் சுமை ஏற்படுவதாலும் தற்போதுள்ள குடிநீர் உபவிதிகளில் உள்ள குடிநீர் உபவிதி எண்.5, 8எ, 9பி மற்றும் உபவிதி எண்.10 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு குடிநீர் கட்டணத்தை உயர்வு செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

அ) உபசட்டம் எண்.5ல் ஒரே வளாகத்தில் அதிக எண்ணிக்கையான வீடுகள் கட்டப்பட்டிருந்து அத்தகைய வீடுகள் குழாய் எண்ணிக்கையைவிட அதிகரித்தால் ஒவ்வொரு இணைப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.165/–வீதம் வசூல் செய்யப்படும்.

ஆ) உபசட்டம் எண்.8(எ)ல் உபயோகப்படுத்தப்படும் தண்ணீருக்கு 1000லிட்டருக்கு அதன் பாகத்திற்கு ரூ.20/— வீதம் தண்ணீர் கட்டணம் செலுத்த அனுமதிக்கலாம்.
இ) உபசட்டம் 9(பி)ல் தற்போதுள்ள உபசட்டம் 9(பி)ல் குழாய் விகிதத்தில் முதல் குழாய் மாதம் 1க்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ.90/— என்பதற்கு பதிலாக கீழ்கண்டவாறு சேர்க்கப்படும்.
வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு குறைந்தபட்ச கட்டணமாக மாதம் 1க்கு ரூ.165/— வசூல் செய்யப்படும். மீட்டர் கட்டணமாக மாதம் 1க்கு ரூ.5/— கூடுதலாக வசூலிக்கப்படும்.
ஈ) உபசட்டம் 10க்கு பதிலாக கீழ்கண்டபடி சேர்க்கப்படும்.

i. வீட்டு உபயோகத்திற்கு அல்லாத வணிக சம்மந்தமான காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகள் மீட்டர் பொருத்தப்பட்டு 1000 லிட்டருக்கோ அல்லது அதன் பாகத்திற்கோ கட்டணம் ரூ.35/— வசூலிக்கப்படும். குறைந்தபட்ச குடிநீர் குழாய் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.655/— என வசூலிக்கப்படும். மீட்டர் வாடகை கட்டணம் ரூ.10/— கூடுதலாக வசூலிக்கப்படும்.

ii. வீட்டு உபயோகத்திற்கு அல்லாத தொழிற்சாலை காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தப்பட்டு 1000 லிட்டருக்கோ அதன் பாகத்திற்கோ ரூ.50/— வசூலிக்கப்படும். குறைந்தபட்ச குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.655/— வசூலிக்கப்படும். மீட்டர் வாடகை கட்டணம் ரூ.10/— கூடுதலாக வசூலிக்கப்படும்.

உ) வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் கட்டண வைப்புத் தொகை ரூ.6250/— வணிக உபயோகத்திற்கு குடிநீர் கட்டண வைப்புத் தொகை ரூ.12500/— எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி கட்டண உயர்வு ஏற்கனவே உள்ள இணைப்புகளுக்கும், புதிய இணைப்புகளுக்கும் பொருந்தும். (இ2/2020)

தீர்மான எண்.198 அனுமதிக்கப்பட்டது.

66)கரூர் நகராட்சி பகுதிகளில் உள்ள 48 வார்டுகளிலும் 67428 குடியிருப்புகள் உள்ளன, பருவ மழை காலத்தினை முன்னிட்டு டெங்கு மற்றும் கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் ந.க.எண்.2571/2017/ஜே1, நாள்.23.04.2018—ன்படி ஒவ்வொரு 300 குடியிருப்புகளுக்கும் ஒரு கொசு ஒழிப்பு பணியாளர் வீதம் (DBC) 67428 குடியிருப்புகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் 225 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC) தற்காலிகமாக ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.2084 நாள்.23.03.2020—ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவர்லேண்ட் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் பி. லிட், சென்னை என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு 31.03.2021—ல் ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் தற்போது கொசுக்களினால் தொற்றுநோய்கள் பரவக்கூடிய சூழ்நிலை உள்ளதால், கொசுக்கள் மூலம் பரவும் நோயினால் பாதிப்பு அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால், தற்போது 48 வார்டுகளில் 73570 குடியிருப்புகள் உள்ளன, ஒவ்வொரு 300 குடியிருப்புக்களுக்கும் ஒரு கொசு ஒழிப்பு பணியாளர் வீதம் 73570 குடியிருப்புகளுக்கு 245 கொசு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) தேவைப்படுகிறது, இந்நிலையில் தற்போது தமிழக சட்டமன்ற தேர்தல் 2021 எதிர்நோக்கி கொசு ஒழிப்பு பணியாளர்களின் ஒப்பந்த காலத்தினை நீட்டித்து பொதுமக்களின் பொதுசுகாதாரம் பாதிக்கப்படாமல் பாதுகாக்க மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் 01.04.2021 முதல் தேவையின் அடிப்படையில் DBC பணியாளர்களை ஏற்கனவே வழங்கி வரும் அவர்லேண்ட் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் பி. லிட், சென்னை, நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த பணியினை ஏற்கனவே வழங்கப்பட்டு ஊதிய விகிதத்தின் அடிப்படையில் வரும் 2021—2022—ம் நிதியாண்டிற்கு நீட்டிப்பு செய்து ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படிபணிக்கு ஆகும் உத்தேச செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/8466/2017)

தீர்மான எண்.199 அனுமதிக்கப்பட்டது.

67)கரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை 213 துப்புரவு பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.22078/பி3/2016 நாள்.31.08.2016ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்திற்கு கரூர் நகர்மன்ற தீர்மான எண்.202 நாள்.12.05.2017ல் அனுமதி பெறப்பட்டு 30.03.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு நகர்மன்ற தீர்மான எண்.1534 நாள்.31.03.2019ன்படி அனுமதிக்கப்பட்ட பணியானது வருகிற 31.03.2020 அன்றுடன் முடிவடைகிறது.

மேற்படி பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலையால் காலதாமதம் ஏற்படும் என்பதால் தற்போது திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் என 100சதவிகிதம் பிரித்து வாங்கும் பணிகள் மற்றும் கொரோனா வைரஸ் உலகளாவிய பொதுசுகாதார அவசர நிலையாக அறிவிக்கப்பட்ட நிலையில், நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிகள் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளதால் மேற்படி நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு நகர்மன்ற தீர்மான எண்.2470 நாள்.23.03.2020ன்படி அனுமதிக்கப்பட்ட பணியானது வருகிற 31.03.2021 அன்றுடன் முடிவடைகிறது.

. இந்நிலையில் மேற்படி பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோர நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் இவவலுவலக கடிதம் ந.க.எண்:எச்1/1853/2020 நாள்:22.06.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் அனுப்பட்டு இந்நாள் வரை எந்த ஒரு உத்திரவும் வரப்பெறவில்லை. ஆனால் பொதுசுகாதாரப் பணிஅத்தியாவசிய பணி என்பதாலும் பொதுமக்களின் சுகாதாரநலன் கருதியும், திடகழிவு மேலாண்மை விதி 2016–ன்படி திடகழிவுகளை வீடுவீடாக சென்று மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் என பிரித்து வாங்கப்படும் பணி பாதிக்கப்படுவதோடு சாலை ஓரங்களிலும், வீடுகளுக்கு அருகிலும் திடக்கழிவுகள் தேக்கமடையும் நிலை உருவாகக் கூடும். தற்போது சட்டமன்ற பொதுதேர்தல் 2021 அறிவிப்புகள் வெளியிட இருப்பதாலும், கொரோனா தொற்று இரண்டாவது அலை பரவும் சூழ்நிலை உள்ளதால் குறைவான எண்ணிக்கையில் தூய்மை பணியாளர்களை கொண்டு பணியாற்றும் போது பொதுசுகாதார பணிகள் பாதிக்கப்படும். புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் ஆரம்பிக்கும் வரை பொதுசுகாதார அவசியம் கருதி ஏற்கனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை நிறுவனத்தினருக்கே ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின்படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2021 முதல் காலநீட்டிப்பு செய்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் ஆரம்பிக்கும் வரை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தின்படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2021 முதல் காலநீட்டிப்பு செய்து வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/9209/2016)

தீர்மான எண்.200 அனுமதிக்கப்பட்டது.

68)கரூர் நகராட்சிக்கு எதிராக ஆணையாளர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட கீழ்கண்ட வழக்குகளில் இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.D.ரகு அவர்களை வழக்கினை ஏற்று நடத்த வாக்காலத்து படிவம் கொடுக்கப்பட்டு வழக்கினை நடத்தி வருகின்றார்.

| வஎ ண். | வழக்கு எண். | வாதியின் பெயர் | பிரதிவாதி விவரம் | கோப்பு எண். | வழக்காடு கட்டணம் ரூபாய். |
|---|---|---|---|---|---|
| 1 | WP (MD) No. 14721/2020 | திரு.P.இளங்கோவன் | ஆணையாளர் கரூர் நகராட்சி | எப்1 /5966/2020 | 5000/– |
| 2 | WP (MD) No. 17574/2020 | திரு.R.சுரேஷ் குமார் | ஆணையாளர் கரூர் நகராட்சி | எப்1 / 7469/2020 | 5000/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | WP (MD) No. 18160/2020 | திரு.M.R.K.சிவா | ஆணையாளர் கரூர் நகராட்சி | எப்1 / 6582/2020 | 5000/– |
| 4 | WP (MD) No. 16859/2020 | திரு.C.பெரியசாமி | ஆணையாளர் கரூர் நகராட்சி. | எப்1/6203/2020 | 5000/– |
| 5 | WP (MD) No. 14328/2020 | திரு.N.நித்தியகுமார் | ஆணையாளர் கரூர் நகராட்சி. | எப்1 / 6963/2017 | 5000/– |

மேற்கண்ட வழக்குகளில் இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை அரசு வழக்கறிஞர் திரு. D.ரகு அவர்கள் ஆஜராகி வழக்குகளை நடத்துவதற்கு வழக்காடு கட்டணமாக வழக்கு ஒன்றுக்கு ரூ. 5000/– வீதம் 5 வழக்கிற்கு ரூ.25,000/– (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(எப்1/5966/2020)

தீர்மான எண்.201 அனுமதிக்கப்பட்டது.

69)கரூர் நகராட்சி அலுவலம் மற்றும் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் குடியரசு தின விழாவிற்கான(2021) ஏற்பாடுகள் செய்தல் பணிக்கு முதன்முறையாக 25.01.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 லட்சம்</u>

1. K.Ramasamy, KRS Light Sound Service, Karur மதிப்பீட்டை விட 0.24% சதம் குறைவு
2. G.Kathirvel, Mani Sound Service,Karur மதிப்பீட்டை விட 2.16% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.08, நாள்.08.01.2021ம் தேதி ரூ.1.50 இலட்சத்தில் நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள K.Ramasamy, KRS Light Sound Service, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/665/2021)

தீர்மான எண்.202 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி